


admin@dhinakani.com

RNI-TNTAM/2023/88253


# நமது தினகனி

NAMADHU DHINA KANI www.dhinakani.com காலை நாளிதழ்




Vol: 02 | Issue: 336 | 4 Pages | 2.7.2025 | Wednesday | Price Rs. 6 | Annual Subscription Rs: 1825

மலர்: 02 | இதழ்: 336 | 4 பக்கங்கள் | 2.7.2025 | புதன்கிழமை | விலை ரூ.6 | வருட சந்தா ரூ.1825



**உயிருடம்பின் நீக்கியா ரென்ப செயிருடம்பின்**
**செல்லாத்தீ வாழ்க்கை யவர்**

**விளக்கம்:** நோய் மிகுந்த உடம்புடன் வறுமையான தீய வாழ்க்கை உடையவர், முன்பு கொலை பல செய்து உயிர்களை உடம்புகளில் இருந்து நீக்கினவர் என்று அறிஞர் கூறுவர்.

## புதுச்சேரியில் இருந்து பெங்களூரு புறப்பட்ட விமானத்தில் தொழில்நுட்பக் கோளாறு



புதுச்சேரி,ஜூலை 2

புதுச்சேரியில் இருந்து இன்று மாலை பெங்களூருவுக்கு இண்டிகோ விமானம் புறப்பட்டது. சரியாக விமானம் மாலை 5.15 மணியளவில் ஓடுபாதையில் சென்றுகொண்டிருந்தபோது தொழில்நுட்பக் கோளாறு இருப்பதை விமானி கண்டறிந்தார். இதையடுத்து விமானம் நிறுத்தப்பட்டு, சேவை ரத்துசெய்யப்பட்டது.

ரத்துசெய்யப்பட்ட விமானத்தில் பாஜக தேசிய பொதுச்செயலர் தருண் சுக், நிர்மல் குமார் சுரானா, புதுச்சேரி அரசின் டெல்லி சிறப்பு பிரதிநிதி மல்லாடி கிருஷ்ணாராவ் உள்பட 70 பேர் இருந்தனர். விமானத்தில் ஏற்பட்ட கோளாறை சரிசெய்யும் பணியில் விமான நிலைய ஊழியர்கள் ஈடுபட்டு வருகின்றனர்.

## உக்ரைன் வந்த ஜெர்மனி மந்திரி; ராணுவ ஆதரவு தொடர்ந்து வழங்கப்படும் என உறுதி

கீவ், ஜூலை 2

நேட்டோ கூட்டணியில் இணைய முயன்ற உக்ரைன் மீது 2022ம் ஆண்டு ரஷியா போர் தொடுத்தது. 3 ஆண்டுகளைத் தாண்டியும் இந்த போர் தொடர்ந்து நடைபெற்று வருகிறது. இதில் உக்ரைனுக்கு ஆதரவாக அமெரிக்கா, ஐரோப்பிய நாடுகள் பொருளாதார உதவி வழங்குகின்றன. இதன்மூலம் உக்ரைன் தொடர்ந்து போரில் தாக்குப்பிடித்து நிற்கிறது.

அந்தவகையில் அமெரிக்காவுக்கு அடுத்தபடியாக உக்ரைனுக்கு ராணுவ உதவி வழங்கும் 2வது பெரிய நாடு ஜெர்மனி. அந்த நாட்டின் வெளியுறவு மந்திரி ஜோஹன் வடேபுல் அறிவிக்கப்படாத பயணமாக உக்ரைன் சென்றுள்ளார். அங்கு அதிபர் விளாடிமிர் ஜெலன்ஸ்கி மற்றும் வெளியுறவு மந்திரி ஆண்ட்ரி சிபிஹாவை சந்தித்து பேசினார். அப்போது ரஷியாவின் தாக்குதலை சமாளிக்க உக்ரைனுக்கு தொடர்ந்து ஆதரவு வழங்கப்படும் என அவர் தெரிவித்துள்ளார்.

## டிரம்பை நேசிக்கிறோம்; பாலஸ்தீனிய மக்கள் கோஷம் காரணம் என்ன?



வாஷிங்டன் டி.சி., ஜூலை 2

காசாபகுதியில் ஓராண்டுக்கு மேலாக இஸ்ரேல் நடத்திய தாக்குதலில், 53 ஆயிரத்திற்கும் மேற்பட்ட பாலஸ்தீனியர்கள் உயிரிழந்து உள்ளனர். 1 லட்சத்து 13 ஆயிரத்திற்கும் மேற்பட்டோர் காயமடைந்தும் உள்ளனர். இதனை காசா சுகாதார அதிகாரிகள் உறுதி செய்துள்ளனர்.

எனினும், நாங்கள் பயங்கரவாதிகளையே இலக்காக கொண்டு தாக்குதல் நடத்துகிறோம் என இஸ்ரேல் கூறுவதுடன், மக்கள் அடர்த்தியான பகுதிகளில் அவர்கள் (ஹமாஸ் அமைப்பினர்) செயல்படுகின்றனர் என்றும் அதனால், பொதுமக்களின் உயிரிழப்புகள் ஏற்படுகின்றன என்றும் தெரிவித்துள்ளது.

இந்நிலையில், ஈரான் மீது இஸ்ரேல் மேற்கொண்ட ராணுவ நடவடிக்கைகளால், பல சந்தர்ப்பங்கள் திறந்துள்ளன என இஸ்ரேல் பிரதமர் நெதன்யாகு நேற்று கூறினார். இதனால், மீதமுள்ள பணய கைதிகளை சொந்த நாட்டுக்கு அழைத்து வரும் சாத்தியம் அதிகரித்து உள்ளது என்றும் கூறினார்.

எனினும், போரை இஸ்ரேல் நிறுத்தும்படி பணய கைதிகளின் உறவினர்கள் வலியுறுத்தி வருகின்றனர். இதற்காக ஒரு விரிவான ஒப்பந்தம் ஒன்றை ஏற்படுத்தி, 50 பணய கைதிகளையும் திரும்ப அழைத்து, காசாவில் போரை முடிவுக்கு கொண்டு வேர வேண்டும் என அவர்கள் நேற்று வலியுறுத்தினர்.

இந்த சூழலில், அமெரிக்க ஆதரவு பெற்ற நிவாரண உதவி பொருட்கள் காசாவுக்குள் கொண்டு செல்லப்பட்டன. இதுபற்றிய வீடியோ ஒன்றை வெள்ளை மாளிகையின் ஊடக செய்தி தொடர்பாளரான கரோலின் லீவிட் பகிர்ந்து உள்ளார். அதில் பாலஸ்தீனிய மக்கள் டிரம்பை நாங்கள் நேசிக்கிறோம். டொனால்டை நேசிக்கிறோம் என கோஷங்களை எழுப்பினர்.

இதேபோன்று டிரம்ப் வெளியிட்ட பதிவு ஒன்றையும் லீவிட் பகிர்ந்து உள்ளார். அதில், காசாவில் ஒப்பந்தம் ஏற்படுத்துவோம். பணய கைதிகளை மீட்டு கொண்டு வருவோம் என தெரிவிக்கப்பட்டு இருந்தது. இதனால் ஹமாஸ் அமைப்பினரிடம் சிக்கியுள்ள பணய கைதிகள் மீட்கப்படும் சாத்தியம் அதிகரித்து காணப்படுகிறது.

# 21 முதல்நிலை காவலர்களுக்கு பதவி நிலை உயர்வுக்கான ஆணை: முதல்அமைச்சர் மு.க.ஸ்டாலின் வழங்கினார்

சென்னை ஜூலை 2

உறுதியான பணி முன்னேற்றத் திட்டத்தின்படி காவலர்களுக்கான நிலை உயர்த்துதலை மாற்றி 21 முதல்நிலை காவலர்களுக்கு தலைமை காவலர் பதவி நிலை உயர்வுக்கான ஆணைகளை முதல்அமைச்சர் மு.க. ஸ்டாலின் இன்று வழங்கினார். இது தொடர்பாக வெளியிடப்பட்டுள்ள செய்திக்குறிப்பில் தெரிவிக்கப்பட்டிருப்பதாவது:

முதல்அமைச்சர் மு.க. ஸ்டாலின் இன்று தலைமைச் செயலகத்தில், காவல்துறையில் உறுதியான பணி முன்னேற்றத் திட்டத்தின்படி தற்போதுள்ள 10+5+10 ஆண்டுகள் என்ற காவலர்களுக்கான நிலை உயர்த்துதலை மாற்றி 10+3+10 என்று நிர்ணயம் செய்து, மாநகர காவல் ஆணையரகத்திற்குட்பட்ட 10 முதல்நிலை காவலர்கள் மற்றும் காவல் சரகத்திற்குட்பட்ட மாவட்டங்களிலிருந்து 11 முதல் நிலை காவலர்கள், என மொத்தம் 21 முதல்நிலை காவலர்களுக்கு தலைமை காவலர்களாக பதவி நிலை உயர்வு ஆணைகளை வழங்கினார்.

202526ம் ஆண்டிற்கான காவல் துறை மானிய கோரிக்கையில் முதல் அமைச்சர் மு.க. ஸ்டாலின், காவலர்கள் பதவி உயர்வில் ஏற்படும் காலதாமதத்தினை கருத்தில் கொண்டு, உறுதியான பணி முன்னேற்றத் திட்டத்தின் அடிப்படையில் தற்போது நடைமுறையில் உள்ள காவலர்களுக்கான நிலை உயர்த்துதல் (Upgradation) காலத்தை காவல் ஆளிநர்களை முதல்நிலை காவலர் / தலைமை காவலர் / சிறப்பு உதவி ஆய்வாளர் பதவி நிலை உயர்வு மேம்படுத்துவதற்கான கால அவகாசம் 10+5+10 ஆண்டுகள் என்பதை மாற்றி 10+3+10 ஆண்டுகளாக குறைக்கப்படும் என்று அறிவித்திருந்தார்.



அதன்படி, தற்போதுள்ள பதவி நிலை உயர்வுத் திட்டத்தை மாற்றி 10 ஆண்டுகள் பணிபுரிந்த இரண்டாம் நிலைக் காவலர்கள் முதல்நிலைக் காவலர்களாகவும், முதல் நிலை காவலர் பதவியிலிருந்து தலைமை காவலர் பதவி உயர்வு பெறுவதற்கான தகுதியுள்ள காலம் 5 ஆண்டு கால வரம்பை 3 ஆண்டுகளாகக் குறைக்கப்பட்டு, பின்னர் தலைமைக் காவலர்களாக 10 ஆண்டுகள் பணிபுரிந்த பின்னர் (மொத்தம் 23 ஆண்டுகள்) தலைமை காவலர் பதவியிலிருந்து சிறப்பு உதவி ஆய்வாளர்களாக பதவி நிலை உயர்வு பெற வழிவகை செய்து அரசாணை வெளியிடப்பட்டுள்ளது. மேலும், இப்புதிய பதவி நிலை உயர்வுத் திட்டத்தைச் செயல்படுத்த 28.19 கோடி ரூபாய் நிதி ஒதுக்கீடு செய்துள்ளது. மேற்படி திருத்திய கொள்கை முடிவானது அரசாணை வெளியிடப்பட்ட 12.06.2025 நாளிலிருந்து நடைமுறைப்படுத்தப்படும்.

இந்த புதிய பதவி நிலை உயர்வுத் திட்டத்தின்படி 2011ம் ஆண்டில் பணியில் சேர்ந்த 8,533 காவலர்களில், 12.06.2025 அன்று 3 ஆண்டுகள் முதல் நிலை காவலர்களாக பணிநிறைவு செய்து பணியாற்றுபவர்கள்1.07.2025 முதல் உடனடி பயனடைந்து தலைமை காவலர்களாக பதவி நிலை உயர்வு பெறுவர்.

மேலும், 2026ம் ஆண்டில், முதல் நிலை காவலர்களாக பணியாற்றும் 11,488 காவலர்கள் இப்புதிய பதவி நிலை உயர்வின்படி தலைமை காவலர்களாக பதவி நிலை உயர்வு பெற உள்ளனர். இந்த புதிய காவலர்களுக்கான நிலை உயர்த்துதல் ஆணையினை செயல்படுத்திடும் வகையில், முதல்அமைச்சர் இன்றையதினம் ஒவ்வொரு மாநகர காவல் ஆணையரகத்திற்குட்பட்ட 10 முதல்நிலை காவலர்கள் மற்றும் ஒவ்வொரு காவல் சரகத்திற்குட்பட்ட மாவட்டங்களில் இருந்து 11 முதல் நிலை காவலர்களுக்கும், என மொத்தம் 21 முதல்நிலை காவலர்களுக்கு தலைமை காவலர்களாக பதவிநிலை உயர்வு ஆணை வழங்கி வாழ்த்தினார். இவ்வாறு அதில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

## "திருப்புவனம் காவலாளி மரணத்தில் குற்றவாளிகள் தண்டிக்கப்படுவார்கள்" அமைச்சர் ரகுபதி பேட்டி



புதுக்கோட்டை, ஜூலை 2

புதுக்கோட்டையில் இயற்கை வளங்கள் துறை அமைச்சர் ரகுபதி நேற்று நிருபர்களுக்கு பேட்டியளித்தார். அப்போது அவர் கூறியதாவது:

'ஓரணியில் தமிழ்நாடு' என்ற பரப்புரையை தி.மு.க. சார்பில் தொடங்கப்பட்டுள்ளது. இது தி.மு.க.வுக்காக அல்ல. தமிழகத்திற்கான ஒரு பரப்புரை, தமிழ்நாட்டிற்கான ஒரு முழக்கம்.

ஜெயலலிதாவை போல, எங்களுக்கு கண்ணுக்கு எட்டிய தூரம் வரை எதிரிகள் தெரியவில்லை என்று நாங்கள் எந்த காலத்திலும் கூறவில்லை. எதிரிகள் இருக்கிறார்கள், ஆனால் அந்த எதிரிகளுக்கு தைரியம் கிடையாது. அந்த எதிரிகளை வெல்லக்கூடிய ஆற்றல் எங்களுக்கு இருக்கிறது. இந்த பரப்புரையில் அவர்களையும் சந்தித்து தமிழகத்தின் நிலை, கீழடி ஆராய்ச்சி விவகாரத்தையும் எடுத்துரைக்க உள்ளோம். அ.தி.மு.க., பா.ஜனதா, பா.ம.க., தே.மு.தி.க. என அனைத்து கட்சியினரையும் சந்திப்போம்.

அ.தி.மு.க. ஆட்சியில் சாத்தான்குளம் போலீஸ் நிலையத்தில் தந்தை, மகன் இறந்த சம்பவத்திற்கும், திருப்புவனம் காவலாளி மரணத்திற்கும் வேறுபாடு இருக்கிறது. திருப்புவனம் காவலாளி மரணத்தில் தவறு செய்தவர்கள் காவல்துறையினராக இருந்தாலும் அவர்கள் சட்டத்தின் முன் தண்டிக்கப்படுவார்கள் என முதல்அமைச்சர் மு.க.ஸ்டாலின் தெரிவித்துள்ளார். சாத்தான்குளம் சம்பவத்தில் தந்தை, மகனை அடித்தே கொலை செய்தனர். அது வேறு, இது வேறு விவகாரம். இரண்டையும் ஒப்பிட முடியாது.

சாத்தான்குளம் சம்பவம் என்றும் மறக்க முடியாத, மாற்ற முடியாத ஒன்று.

திருப்புவனம் சம்பவம் என்பது தற்செயலாக நிகழ்ந்திருக்கிறது. இது துரதிர்ஷ்டவசமான ஒன்று. அதற்கு அடிப்படை காரணங்களை கண்டுபிடித்து வருகிறோம். காவல்துறை எந்த அளவுக்கு பொறுப்பு என்பது விசாரணையில் தெரியவரும்.

குற்றவாளிகளை, குற்றம் சாட்டப்பட்டவர்களை பாதுகாக்க மாட்டோம். அவர்கள் மீது உரிய நடவடிக்கை எடுக்கப்படும். பிரேத பரிசோதனை அறிக்கையின் அடிப்படையில் அடுத்தக்கட்ட நடவடிக்கையை அரசு மேற்கொள்ளும். ஐ.ஏ.எஸ்., ஐ.பி.எஸ். அதிகாரிகள் யாராக இருந்தாலும் நாங்கள் விட்டு விடுவதில்லை. எவ்வளவு உயர் பதவியில் இருந்தாலும் நடவடிக்கை எடுக்கப்படும். யாரையும் காப்பாற்ற வேண்டிய அவசியம் இந்த அரசுக்கு கிடையாது.

அண்ணா பல்கலைக்கழக மாணவி விவகாரத்தில் 5 மாதத்திலேயே தண்டனை வாங்கி கொடுத்தோம். அதுபோல இந்த சம்பவத்திலும் தண்டனை வாங்கி கொடுத்து நீதிமன்றத்தில் இந்த அரசு சிறந்த அரசு என்ற பாராட்டை பெறுவோம்.

இவ்வாறு அவர் கூறினார்.

## சஷ்டி விரத தினம்: சென்னிமலை முருகன் கோவிலில் திரண்ட பக்தர்கள்

ஈரோடு ஜூலை 2

கந்த சஷ்டி கவசம் அரங்கேறிய தலமாக போற்றப்படும் சென்னிமலை முருகன் கோவிலில் செவ்வாய்க்கிழமைகளில் ஏராளமான பக்தர்கள் வருகை தந்து தரிசனம் செய்வார்கள். அவ்வகையில் இன்று செவ்வாய்க்கிழமை மற்றும் சஷ்டி திதி இரண்டும் இணைந்து வந்ததால் வழக்கத்தை விட கூடுதலாக பக்தர்கள் மலைக் கோவிலில் திரண்டனர்.



காலையில் சுமார் 1 மணி நேரம் நீண்ட வரிசையில் பக்தர்கள் காத்திருந்து முருகப் பெருமானை வழிபட்டனர். முருகப்பெருமானுக்கு சிறப்பு பூஜை, அபிஷேகம் நடைபெற்றது. பல்வேறு ஊர்களிலிருந்து காவடி எடுத்து பொதுமக்கள் வந்திருந்தனர். பக்தர்களின் வசதிக்காக கோவில் பஸ் இயக்கப்பட்டது.

## மதுரை முருக பக்தர்கள் மாநாடு: அண்ணாமலை உட்பட 3 பேர் மீது வழக்குப்பதிவு

சென்னை, ஜூலை 2

மதுரை பாண்டிக்கோவில் அருகே அம்மா திடலில் இந்து முன்னணி சார்பில் முருக பக்தர்கள் மாநாடு கடந்த ஜூன் மாதம் 22ம் தேதி நடந்தது. இதை முன்னிட்டு அறுபடை முருகன் கோவில்களின் மாதிரிகள் கண்காட்சியாக அமைக்கப்பட்டு, வழிபாடுகள் அங்கு நடந்து வந்தன. நாள்தோறும் ஏராளமானவர்கள் தரிசித்தார்கள். மாநாட்டு மேடை திருப்பரங்குன்றம் மலையை பின்னணியாக வைத்தும், அதில் முருகப்பெருமான் படத்துடன், அறுபடை வீடுகளின் கோபுரங்களும் இடம்பெறுவது போன்றும் வடிவமைக்கப்பட்டு இருந்தது.




இந்தநிலையில், அண்ணாமலை மீது மத உணர்வுகளை புண்படுத்தும் நோக்கில் பேசுதல் உள்ளிட்ட 4 பிரிவுகளின் கீழ் மதுரை மாநகர போலீசார் வழக்குப்பதிவு செய்துள்ளனர்.

வழக்கறிஞர் வாஞ்சிநாதன் புகாரின் அடிப்படையில் பாஜக மாநில முன்னாள் தலைவர் அண்ணாமலை, முன்னணி தலைவர் காடேஸ்வரா சுப்ரமணியம், இந்து முன்னணி நிர்வாகி செல்வகுமார் உட்பட 3 பேர் மீது வழக்குப்பதிவு செய்யப்பட்டுள்ளது. மத ரீதியாக பேசி பகைமையை உருவாக்குதல், மத உணர்வுகளை புண்படுத்துதல், பொது அமைதிக்கு குந்தகம் விளைவித்தல் உள்ளிட்ட பிரிவுகளின் கீழ் வழக்குப் பதிவு செய்யப்பட்டுள்ளதாக தகவல் வெளியாகி உள்ளது.



# உயிரிழந்த இளைஞர் என்ன பயங்கரவாதியா? காவல்துறைக்கு மதுரை ஐகோர்ட்டு கிளை சரமாரி கேள்வி



மதுரை, ஜூலை 2

சிவகங்கை மாவட்டம் திருப்புவனத்தில் விசாரணைக்கு அழைத்துச் செல்லப்பட்ட கோவில் காவலாளியான அஜித் என்ற இளைஞர், போலீசாரால் அடித்து கொலை செய்யப்பட்டதாக புகார் எழுந்துள்ளது. இந்த விவகாரம் தொடர்பாக 6 காவலர்களை மாவட்ட எஸ்.பி. பணியிடை நீக்கம் செய்து உத்தரவிட்டிருந்தார்.

இதனிடையே இந்த வழக்கை தாமாக முன் வந்து விசாரிக்கக் கோரி மதுரை ஐகோர்ட்டு கிளை அமர்வில் முறையீடு செய்யப்பட்டுள்ளது. இந்த மனு தொடர்பான விசாரணை இன்று நடைபெற்றபோது, "உயிரிழந்த இளைஞர் என்ன பயங்கரவாதியா? ஆயுதம் ஏந்தி தாக்கினாரா?" என கேள்வி எழுப்பிய நீதிபதிகள், ஆயுதம் ஏந்தி தாக்கினால், தற்காப்புக்காக காவல்துறையினர் தாக்குவதை ஏற்கலாம் என தெரிவித்துள்ளனர்.

மேலும், "சாதாரண சந்தேக வழக்கில் விசாரணை எனும் பெயரில் தாக்கியது ஏன் என தெரியவில்லை?" என்று குறிப்பிட்ட நீதிபதிகள், சட்ட விரோத காவல் மரணங்களை ஒருபோதும் ஏற்க முடியாது என்றும், கடந்த 4 ஆண்டுகளில், 24 காவல் மரணங்கள் ஏற்பட்டுள்ளதாகவும் தெரிவித்தனர்.

# மேட்டூர் அணைக்கு நீர்வரத்து அதிகரிப்பு



சேலம் ஜூலை 2

கர்நாடகா மற்றும் கேரளா மாநிலங்களில் கடந்த சில நாட்களாக மழை பெய்து வருகிறது. இதன் காரணமாக கர்நாடக மாநிலத்தில் உள்ள கபினி, கிருஷ்ணராஜ சாகர் அணைகள் நிரம்பி உபரிநீர் காவிரி ஆற்றில் திறந்து விடப்பட்டுள்ளது.

இதன் காரணமாக மேட்டூர் அணைக்கு நீர்வரத்து அதிகரித்துள்ளது. அதன்படி, காலை 8 மணி நிலவரப்படி மேட்டூர் அணைக்கு நீர்வரத்து 58 ஆயிரம் கன அடியாக அதிகரித்துள்ளது. அணையின் நீர்மட்டம் 120 அடியாக உள்ளது. அணைக்கு வரும் நீரின் அளவு வினாடிக்கு 57 ஆயிரத்து 732 கன அடியில் இருந்து 58 ஆயிரம் கன அடியாக அதிகரித்துள்ளது.

அணையிலிருந்து 58 ஆயிரம் கன அடி நீர் வெளியேற்றப்பட்டு வருகிறது. இதில் காவிரி டெல்டா பாசனத்திற்காக 26 ஆயிரம் கன அடியும், 16 கண் மதகுகள் வழியாக 32 ஆயிரம் கன அடி நீரும் வெளியேற்றப்பட்டு வருகிறது. அணையில் நீர் இருப்பு 93.470 டி.எம்.சி.யாக உள்ளது.

# கோவை: மின்சார ஆம்னி பஸ் தீப்பிடித்து எரிந்தது21 பேர் காயம்



கோவை , ஜூலை 2

திருச்சியில் இருந்து கோவைக்கு தனியார் மின்சார ஆம்னி பஸ் ஒன்று புறப்பட்டு வந்தது.அந்தபஸ்திருப்பூரில் சில பயணிகளை இறக்கி விட்டு பிறகு கோவை நோக்கி வேகமாக வந்து கொண்டு இருந்தது. பஸ்சில் 26 பயணிகள் இருந்தனர்.நேற்று அதிகாலை 2.30 மணி அளவில் பஸ்சில் இருந்த பயணிகள் அனைவரும் அயர்ந்து தூங்கிக் கொண்டு இருந்தனர். அந்த பஸ் கோவை கருமத்தம்பட்டி மேம்பாலம் அருகே வந்த போது திடீரென்று டிரைவரின் கட்டுப்பாட்டை இழந்து தாறுமாறாக ஓடி, சாலை தடுப்புச்சுவர் மீது வேகமாக மோதியது.

இதனால் அயர்ந்த தூக்கத்தில் இருந்த பயணிகள் முன்பக்க இருக்கைகளின் மீது மோதியும், பஸ்சுக்குள் கீழே விழுந்தும் பலத்த காயம் அடைந்தனர். இதற்கிடையே ஆம்னி பஸ்சின் பேட்டரியில் இருந்து புகைமூட்டம் வந்தது. உடனே பஸ் டிரைவர் பயணிகளை சீக்கிரமாக பஸ்சை விட்டு கீழே இறங்குமாறு கூறினார். அதை கேட்ட பயணிகள் தூக்க கலக்கத்தில் பஸ்சில் இருந்து இறங்க முயன்றனர். இதில் சிலரால் பஸ்சில் இருந்து வேகமாக இறங்க முடியவில்லை.

இந்த நிலையில் அப்பகுதியில் லாரியை ஓட்டி வந்த சபரிமலை, மாற்று டிரைவர் ரமேஷ் ஆகியோர் லாரியை ஓரமாக நிறுத்திவிட்டு பஸ்சின் கண்ணாடிகளை உடைத்து பயணிகளை மீட்கும் பணியில் ஈடுபட்டனர்.

இதற்கிடையே பேட்டரியில் இருந்து எழுந்த புகை திடீரென்று, தீப்பிழம்பாக மாறி பஸ் முழுவதும் பரவியது. பின்னர் தீ வேகமாக பஸ் முழுவதும் குபுகுபு என்று பற்றி எரிந்தது.

குறித்த தகவலின் பேரில் தீயணைப்பு வீரர்கள் சம்பவ இடத்துக்கு விரைந்து வந்து போராடி தீயை அணைத்தனர். ஆனால் அதற்குள் அந்த பஸ் முற்றிலும் எரிந்து கருகி எலும்புக்கூடு போல் காட்சி அளித்தது. இந்த விபத்தில் ஒரே குடும்பத்தை சேர்ந்த புவனேஸ்வரன் (வயது 35), தரணிபதி (65) உள்பட 21 பேர் காயமடைந்த நிலையில் ஆஸ்பத்திரியில் சிகிச்சைக்காக அனுமதிக்கப்பட்டனர். இந்த விபத்து குறித்து கருமத்தம்பட்டி போலீசார் விசாரணை நடத்தி வருகிறார்கள்.

# சென்னை மாநகராட்சி கூட்டத்தில் திமுக-பாஜக உறுப்பினர்கள் கடும் வாக்குவாதம்



சென்னை, ஜூலை 2

சென்னை மாநகராட்சி உறுப்பினர்கள் கூட்டம் ரிப்பன் மாளிகையில் இன்று நடைபெற்றது. இந்தக் கூட்டத்துக்கு மேயர் ஆர்.பிரியா தலைமை வகித்தார். இதில், திமுக, அதிமுக, பாஜக ஆகிய கட்சிகளைச்சேர்ந்த மாநகராட்சி உறுப்பினர்கள் பங்கேற்று இருந்தனர். தங்கள் ட், அண்மையில் மத்திய உள்துறை அமைச்சர் அமித்ஷா குறித்து ஆ.ராசா எம்.பி. அவமரியாதையாக பேசியதற்கு கண்டனம் தெரிவித்து கேள்வி நேரத்தில் உமா ஆனந்த் பேசினார்.

உமா ஆனந்தின் பேச்சுக்கு திமுக உறுப்பினர்கள்எதிர்ப்பு தெரிவித்து, வாக்குவாதத்தில் ஈடுபட்டனர். இதற்கு பாஜகவைச் சேர்ந்த மாநகராட்சி உறுப்பினர்களும் வாக்குவாதத்தில் ஈடுபட்டனர். இதனால், திமுக உறுப்பினர்கள் மற்றும் பாஜக உறுப்பினர்கள் இடையே கடும் வாக்குவாதம் ஏற்பட்டது.

இதைத் தொடர்ந்து, மாநகராட்சி உறுப்பினர்கள் கூட்டத்தில் கேள்வி விவாதத்தின் போது, இது போன்று விவகாரங்களை எழுப்பக்கூடாது என்று மாநகராட்சி துணை மேயர் அறிவுறுத்தினார். ஆனால், இதையும் மீறி திமுக, பாஜக உறுப்பினர்கள் கடும் வாக்குவாதத்தில் ஈடுபட்டனர். இதனால், சென்னை மாநகராட்சி உறுப்பினர்கள் கூட்டத்தில் சலசலப்பு ஏற்பட்டது. இந்தச் சம்பவம், மாநகராட்சிக்கு வந்திருந்த பொதுமக்கள் இடையே முகச் சுழிப்பை ஏற்படுத்தியது.

# நெல்லையில் பரிதாபம்: விஷவண்டு கடித்து 2ம் வகுப்பு மாணவன் சாவு



திருநெல்வேலி ஜூலை 2

திருநெல்வேலி மாவட்டம், ஏர்வாடி அருகே உள்ள மாவடி பகுதியைச் சேர்ந்தவர் சுந்தர். கூலித் தொழிலாளியான இவரது மகன் ஜீவானந்தம் (வயது 7), அங்குள்ள ஒரு நடுநிலைப்பள்ளியில் 2ம் வகுப்பு படித்து வந்தான். அதே பகுதியைச் சேர்ந்த பட்டாணித்துரை மகன் 1ம் வகுப்பு படிக்கும் மாணவன் நித்தின்ராஜ்(6). இந்த 2 சிறுவர்களும் நேற்று முன்தினம் வீட்டின் முன் விளையாடிக் கொண்டு இருந்தனர். அப்போது அங்கு கிடந்த தேங்காயில் இருந்த விஷவண்டு (கடந்தை) 2 சிறுவர்களையும் கடித்தது. இதனால் 2 பேரும் அலறினார்கள். 2 சிறுவர்களையும் மீட்டு சிகிச்சைக்காக களக்காட்டில் உள்ள தனியார் ஆஸ்பத்திரிகளில் அனுமதித்தனர். நேற்று அதிகாலையில் ஜீவானந்தத்திற்கு திடீரென உடல்நலம் பாதிக்கப்பட்டது. அவனை பரிசோதித்த டாக்டர்கள், ஜீவானந்தம் ஏற்கெனவே இறந்துவிட்டதாக தெரிவித்தனர். இந்த சம்பவம் குறித்து திருக்குறுங்குடி போலீசார் வழக்குப்பதிவு செய்து விசாரணை நடத்தி வருகின்றனர்.

# பட்டினப்பாக்கம் டிமான்டி சாலைக்கு எம்.எஸ். விஸ்வநாதன் பெயர் சூட்ட தீர்மானம்

சென்னை, ஜூலை 2

சென்னை மாநகராட்சி உறுப்பினர்கள் கூட்டம் ரிப்பன் மாளிகையில் இன்று (ஜூன் 30) நடைபெற்றது. இந்தக் கூட்டத்துக்கு மேயர் ஆர்.பிரியா தலைமை வகித்தார். இந்த மாநகராட்சி கூட்டத்தில் பல்வேறு தீர்மானங்கள் நிறைவேற்றப்பட்டன.

குறிப்பாக சென்னை பட்டினப்பாக்கம் டிமான்டி சாலைக்குஇசையமைப்பாளர்எம்.எஸ்.விஸ்வநாதன் பெயர் சூட்ட சென்னை மாநகராட்சி கூட்டத்தில் தீர்மானம் நிறைவேற்ற ப்பட்டுள்ளது.

அதேபோல, கீழ்ப்பாக்கத்தில் உள்ள வாடல்ஸ் சாலையை எஸ்றா சற்குணம் சாலை என பெயர் மாற்றம் செய்யவும் சென்னை மாநகராட்சி அனுமதி அளித்துள்ளது.

# ஆன்லைன் வர்த்தகத்தில் இரட்டிப்பு லாபம்: தொழில் அதிபரிடம் ரூ.2¼ கோடி மோசடி 4 பேர் கைது

சென்னை, ஜூலை 2

சென்னை தியாகராயநகர் பகுதியை சேர்ந்த தொழில் அதிபர் கிஷோர் என்பவரின் செல்போன் வாட்ஸ்அப்புக்கு சமீபத்தில் குறுந்தகவல் வந்தது. அதில் எங்களதுவாட்ஸ்அப்குழுவில் சேர்ந்து நாங்கள் ஆலோசனை கூறும் பங்கு வர்த்தகத்தில் முதலீடு செய்தால் இரட்டிப்பு லாபம் கிடைக்கும் என குறிப்பிடப்பட்டிருந்தது.

ஆசை வார்த்தையில் மயங்கிய கிஷோர் பல்வேறு வங்கி கணக்குகளில் பல பரிவர்த்தனைகளில் ரூ.2 கோடியே 26 லட்சம் அனுப்பி முதலீடு செய்தார். ஆனால் அவருக்கு லாப பணமும் கிடைக்கவில்லை, முதலீடு பணமும் திரும்ப கிடைக்கவில்லை. இந்த மோசடி குறித்து அவர் அளித்த புகாரின் பேரில் மத்திய குற்றப்பிரிவு சைபர் கிரைம் போலீசார் வழக்குப்பதிவு செய்து விசாரணை நடத்தினார்கள். மோசடி கும்பல் பணத்தை சத்திய நாராயணன் (வயது 60), மணிவேல்(25), ரோஷன்(35), சிம்சேன் செல்லதுரை(26) ஆகிய 4 பேரின் வங்கி கணக்குகளுக்கு அனுப்பி வைத்ததை சைபர் கிரைம் போலீசார் கண்டறிந்தனர். மேலும் நெல்லை, தென்காசி மாவட்டங்களில் பதுங்கி இருந்த அவர்கள் 4 பேரையும் தனிப்படை போலீசார் கைது செய்துள்ளனர். இந்த மோசடி திட்டம் வெளிநாட்டில் இருந்து அரங்கேற்றப்பட்டுள்ளது. எனவே வெளிநாட்டில் பதுங்கி உள்ள மோசடி கும்பலை கைது செய்யும் நடவடிக்கையில் சைபர்கிரைம் போலீசார் ஈடுபட்டுள்ளனர்.

# குரங்கணி முத்துமாலை அம்மன் கோவில் கொடை விழா.. நாளை கால் நாட்டும் நிகழ்ச்சி



தூத்துக்குடி, ஜூலை 2

தூத்துக்குடி மாவட்டம், ஏரல் வட்டம், தாமிரபரணி ஆற்றின் தென்கரையில் அமைந்துள்ள பிரசித்தி பெற்ற ஶ்ரீ குரங்கணி முத்துமாலை அம்மன் கோவில் ஆனி பெருந்திருவிழா (கொடை விழா), ஜூலை மாதம் 15ம் தேதி (செவ்வாய் கிழமை) நடைபெறுகிறது.

கொடை விழாவை முன்னிட்டு நாளை (ஜூலை 1ம் தேதி) செவ்வாய் கிழமை கால்நாட்டு விழா நடைபெறுகிறது. இதையொட்டி நாளை அதிகாலை கோவில் நடை திறக்கப்பட்டு சிறப்பு பூஜைகள் நடைபெறும். தொடர்ந்து மதியம் 1 மணிக்கு அம்மனுக்கு மதிய பூஜை நடைபெறும். பின்னர் முப்புடாதி அம்மன் சன்னதி முன்பு கால் நாட்டு விழா நடைபெறுகிறது. கொடை விழாவில் லட்சக்கணக்கான பக்தர்கள் கலந்துகொண்டு சாமி தரிசனம் செய்வார்கள்.

# ஆறுமுகநேரி சிவன் கோவில் திருவிழா: பச்சை சாத்தி சப்பரத்தில் மகாவிஷ்ணு ஸ்வரூபமாக எழுந்தருளிய நடராஜர்



தூத்துக்குடி ஜூலை 2

ஆறுமுகநேரி ஶ்ரீ சோமசுந்தரி அம்பாள் சமேத சோமநாத சுவாமி கோவிலில் ஆனி உத்திர திருவிழா கடந்த 22ந் தேதி கொடியேற்றத்துடன் தொடங்கி நடைபெற்று வருகிறது. தினசரி காலையிலும் மாலையிலும் சப்பரபவனியும், கலை நிகழ்ச்சிகளும் நடக்கின்றன.

8ம் திருநாள் காலையில் நடராஜர், அம்பாள், மாணிக்கவாசகர் சுவாமிகளுக்கு சிறப்பு அபிஷேக தீபாராதனை நடைபெற்றது. பின்னர் நடராஜ மூர்த்தி வெண்பட்டு உடுத்தி வெண்மலர்சூடி வெள்ளை சாத்தி சப்பரத்தில் பிரம்ம ஸ்வரூபமாக திருவீதி உலா நடைபெற்றது.

இரவில் ஶ்ரீ நடராஜர் மகாவிஷ்ணு ஸ்வரூபமாக எழுந்தருளி பச்சை சாத்தி சப்பரத்தில் பவனி வந்தார். இதன் பின்னர் சேர்க்கை அபிஷேகத்தை தொடர்ந்து வெட்டும் குதிரை வாகனத்தில் சுவாமி அம்பாள் எழுந்தருளல் நடந்தது. முன்னதாக திருச்செந்தூர் ஆதித்தனார் கல்லூரி பேராசிரியர் கதிரேசன், பெரிய புராணத்தில் வாழ்வியல் சிந்தனைகள் என்ற தலைப்பில் சொற்பொழிவு ஆற்றினார். பரத நாட்டிய கலை நிகழ்ச்சியும் நடந்தது.

நிகழ்ச்சிகளில் மண்டக படிதாரர்களான தொழிலதிபர் எஸ்.ஆர்.எஸ். சுரேஷ், கல்யாண குமார், குமார் மற்றும் யாதவ சமுதாயத்தினர் உள்பட திரளான பக்தர்கள் கலந்து கொண்டனர்.

9வது நாளான இன்று காலையில் சுவாமி பிக்சாடனர் கோலத்தில் சப்பர திருவீதி உலாவும், சிறப்பு அபிஷேக ஆராதனையும் நடந்தன. இந்நிகழ்ச்சிக்கான ஏற்பாடுகளை சாகுபுரம் டி.சி. டபிள்யூ நிறுவனத்தின் ஊழியர்கள் செய்திருந்தனர்.

# முன்னாள் விளையாட்டு வீரர்கள் ஓய்வூதியம் பெற ஜூலை 31க்குள் விண்ணப்பிக்கலாம்: தூத்துக்குடி மாவட்ட கலெக்டர் தகவல்

தூத்துக்குடி ஜூலை 2

தூத்துக்குடி மாவட்ட கலெக்டர் இளம்பகவத் வெளியிட்டுள்ள அறிவிப்பில் கூறியிருப்பதாவது:

விளையாட்டுத்துறையில் சர்வதேச/ தேசிய அளவிலான போட்டிகளில் வெற்றி பெற்று தற்போது நலிந்த நிலையிலுள்ள தமிழகத்தைச் சேர்ந்த முன்னாள் சிறந்த விளையாட்டு வீரர்களுக்கு மாத ஓய்வூதியம் ரூ.6,000 வீதம் வழங்கும்திட்டத்தின்கீழ்விண்ணப்பங்கள்வரவேற்கப்படுகிறது.

தகுதி வாய்ந்தவர்கள்:

தமிழகத்தைச் சேர்ந்தவர்களாக இருக்க வேண்டும். தற்போது நலிந்த நிலையில் (வருமானம் குறைந்து, வேலை இல்லாத நிலை போன்றவை) இருப்பது. அரசு/தனியார் நிறுவனங்கள் அல்லது மத்திய அரசின் விளையாட்டு வீரர்களுக்கான ஓய்வூதியம் பெறுபவர்கள் இத்திட்டத்தின்கீழ் ஓய்வூதியம் பெற தகுதி இல்லை. முதியோர்களுக்கான விளையாட்டுப் போட்டிகளில் (Veteran/ Masters Sports Meet) வெற்றி பெற்றவர்கள் இத்திட்டத்தின்கீழ் ஓய்வூதியம் பெற தகுதி இல்லை.

சர்வதேச/ தேசிய அளவிலான போட்டிகளில் பங்கேற்றிருத்தல், சர்வதேச/ தேசிய போட்டிகளில் முதலிடம்/ இரண்டாமிடம் /மூன்றாமிடம் இடங்களில் வெற்றி பெற்று இருத்தல் வேண்டும்.

மத்திய அரசினால் நடத்தப்பட்ட தேசிய அளவிலான பள்ளிகளுக்கு இடையேயான போட்டிகள், அகில இந்திய பல்கலைக்கழகங்களுக்கு இடையேயான போட்டிகள், இந்திய ஒலிம்பிக் சங்கத்தினால் அங்கீகரிக்கப்பட்ட தேசிய விளையாட்டு சம்மேளங்களால் நடத்தப்பட்ட சர்வதேச/ தேசிய அளவிலான விளையாட்டுப் போட்டிகள், மத்திய அரசின் விளையாட்டு அமைச்சகம்/ இந்திய விளையாட்டு ஆணையத்தால் நடத்தப்பட்ட சர்வதேச/ தேசிய அளவிலான விளையாட்டுப் போட்டிகள்.

2025ம் ஆண்டு ஏப்ரல் மாதம் (30.4.2025) அன்று 58 வயது பூர்த்தி அடைந்தவராக இருத்தல் வேண்டும்.

விண்ணப்பதாரரின் மாதவருமானம் ரூ.6,000க்கு மிகாமல் இருக்க வேண்டும். (இதற்கான 2025ம் ஆண்டு பெறப்பட்ட வருமானச் சான்றினை சமர்ப்பித்திட வேண்டும்).

தமிழ்நாடு விளையாட்டு மேம்பாட்டு ஆணையத்தின் இணையதளத்தில் விண்ணப்பபடிவம் கிடைக்கும் மற்றும் தூத்துக்குடி மாவட்ட விளையாட்டு அலுவலகத்தில் அலுவலக வேலை நேரத்தில் நேரில் சென்று விண்ணப்பப் படிவம் பெற்றுக்கொள்ளலாம். விண்ணப்பத்துடன் இணைக்கப்பட வேண்டிய ஆவணங்களை இணைத்து, தூத்துக்குடி மாவட்ட விளையாட்டு மற்றும் இளைஞர் நலன் அலுவலரிடம் அலுவலக வேலை நேரத்தில் நேரில் சமர்ப்பித்திட வேண்டும்.

விளையாட்டு சாதனைகளுக்கான சான்றிதழ்கள், வயது மற்றும் அடையாளச்சான்றிதழ் (ஆதார்), பிறப்பிடச்சான்று (2025ம் ஆண்டு பெற்று இருக்க வேண்டும்), வருமானச் சான்று (2025ம் ஆண்டு பெற்று இருக்க வேண்டும்), ஓய்வு பெற்றதற்கான விவரங்கள் (தொழில்/ விளையாட்டு சார்ந்த).

விண்ணப்பத்துடன் இணைக்கப்பட வேண்டிய ஆவணங்களை இணைத்து தூத்துக்குடி மாவட்ட விளையாட்டு மற்றும் இளைஞர் நலன் அலுவலர் அலுவலகத்தில் மட்டுமே வழங்கிட வேண்டும். சென்னையில் தமிழ்நாடு விளையாட்டு மேம்பாட்டு ஆணையத்தின் தலைமை அலுவலகத்திற்குநேரில்வரவோஅல்லதுஅஞ்சல்மூலமாகவோ அனுப்பிடத் தேவையில்லை.

ஓய்வூதியம் பெறுவதற்கான விண்ணப்பங்கள் 31.7.2025 வரை வழங்கப்படும். பூர்த்தி செய்யப்பட்ட விண்ணப்பங்கள் உரிய ஆவணங்களுடன் இணைத்து 31.7.2025மாலை5மணிக்குள்விண்ணப்பதாரர்தூத்துக்குடி மாவட்டத்தில் உள்ள மாவட்ட விளையாட்டு மற்றும் இளைஞர் நலன் அலுவலர் அலுவலகத்தில் நேரில் சமர்ப்பித்திட வேண்டும்.

இவ்வாறு அவர் தெரிவித்துள்ளார்.

# பணி ஓய்வு நாளன்று வாணியம்பாடி டிஎஸ்பி சஸ்பெண்ட்



திருப்பத்தூர் ஜூலை 2

திருப்பத்தூர் மாவட்டம் வாணியம்பாடி சரக டிஎஸ்பி ஆக பணியாற்றி வந்தவர் விஜயகுமார். இவர் மீது துறை ரீதியில் பல்வேறு புகார்கள் வந்தன.

இந்நிலையில், டிஎஸ்பி விஜயகுமார் இன்று (ஜூன் 30) பணி ஓய்வு பெறுகிறார். ஆனால், பல்வேறு புகார்களில் சிக்கிய விஜயகுமார் பணி ஓய்வு நாளான இன்று சஸ்பெண்ட் செய்யப்பட்டுள்ளார்.

சஸ்பெண்ட் செய்யப்பட்டதற்கான காரணம் குறித்த தகவல் வெளியாகவில்லை.

# காவல் துறையினர் நீதியை நிலைநாட்ட வேண்டும் முதல்அமைச்சர்



சென்னை, ஜூலை 2

தமிழக அரசு வெளியிட்டுள்ள செய்திக்குறிப்பில் தெரிவித்திருப்பதாவது:

தமிழ்நாடு முதல்அமைச்சர் மு.க. ஸ்டாலின் தலைமையில் தலைமைச் செயலகத்தில், மாநிலத்தின் சட்டம் ஒழுங்கு நிலை குறித்த ஆய்வுக்கூட்டம் நடைபெற்றது. இக்கூட்டத்தில் தலைமைச் செயலாளர், காவல்துறை தலைமை இயக்குநர் உள்ளிட்ட காவல்துறை உயர் அலுவலர்களுடன் மாநிலத்தின்சட்டம்ஒழுங்குகுறித்து ஆய்வு செய்ததோடு, காணொலிக் காட்சி வாயிலாக மத்திய, மேற்கு மற்றும் தெற்கு மண்டல காவல் துறை தலைவர்களுடனும் ஆய்வு மேற்கொண்டார்,

அப்போது, முதல்அமைச்சர் காவல் துறை மண்டல வாரியாக ஆய்வு மேற்கொண்டு, குற்றங்கள் குறித்தும், அவைகள் மீது எடுக்கப்பட்ட உடனடி நடவடிக்கைகள் குறித்தும் கேட்டறிந்ததோடு, நீதிமன்ற விசாரணையில் உள்ள வழக்குகள் குறித்தும் கேட்டறிந்தார். காணொலி ஆய்வில் கலந்து கொண்ட மண்டல காவல் துறை தலைவர்கள் தங்கள் மண்டலங்களில் குற்றத்தடுப்பு தொடர்பாக மேற்கொள்ளப்பட்ட புதிய முயற்சிகள் குறித்து விளக்கி கூறினார்கள்.

இக்கூட்டத்தில், தமிழ்நாடு முதல்அமைச்சர் திராவிட மாடல் அரசு ஆட்சிப் பொறுப்பேற்றதிலிருந்து மாநிலத்தில் சட்டம் ஒழுங்கு, பொது அமைதியை மிக கவனமாக கையாண்டு வருவதையும், இவ்வரசால் எடுக்கப்பட்ட நடவடிக்கைகள் மூலம். தமிழ்நாட்டின் தொழில் வளர்ச்சி, தொழில் முதலீடு, புதிய தொழிற்சாலைகள், புதிய வேலைவாய்ப்புகள் போன்றவை அதிகரித்துள்ளதையும் குறிப்பிட்டு, அத்துடன் அனைத்து தரப்பு மக்களும் அமைதியாக வாழ்கின்ற மாநிலமாக தமிழ்நாடு திகழ்கின்றது என்றால் அதற்கு காவல்துறையின் பங்களிப்பு மிகவும் முக்கியமானதாய் விளங்குகின்றது என்று குறிப்பிட்டார்.

மேலும், காவல் நிலையங்களுக்குப் புகார் கொடுக்க வருகின்ற அனைத்து பொதுமக்களிடமும் கண்ணியத்தோடு நடந்து கொண்டு, அவர்களது புகார்கள் மீது குறிப்பிட்ட காலத்திற்குள் உரிய நடவடிக்கைகள் மேற்கொள்ள அறிவுறுத்தினார்.

மேலும், கஞ்சா, கள்ளச் சாராய வழக்குகளில் கைது செய்யப்படும் குற்றவாளிகளுக்கு விரைந்து தண்டனை பெற்றுத்தர தகுந்த நடவடிக்கைகளை மேற்கொள்ள வேண்டும் என்றும், போதைப் பொருள் நடமாட்டத்தை கட்டுப்படுத்தவும் தீவிர நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட வேண்டும் என்றும் அறிவுறுத்தினார்.


சட்டம் ஒழுங்கு தொடர்பான முக்கியப் பிரச்சினைகள் ஏற்படும் போது தொடர்புடைய காவல்துறை உயர் அலுவலர்கள் உடனடியாக ஊடகங்களை சந்தித்து அந்த பிரச்சினை குறித்து தெளிவாக விளக்கம் அளித்து, வதந்திகள் பரவுவதை தடுத்திடவும், காவல்துறையின் மீதான நம்பிக்கையை நிலைநிறுத்தவும் அது உதவும் என்றும் சுட்டிக்காட்டினார்.

சாதி மற்றும் சமய பூசல்களில் ஈடுபடுவர்கள், வதந்தி மற்றும் வெறுப்புணர்வை பரப்பி பொது அமைதிக்கு குந்தகம் விளைவிப்பவர்கள் ஆகியோர் மீது பதிவு செய்யப்படும் வழக்குகளில் கூடுதல் கவனம் செலுத்திட அறிவுறுத்தினார்.

பொது இடங்களில் சிசிடிவி கேமராக்கள் பொருத்துவது, குற்றத்தடுப்பு நடவடிக்கைகளில், சமுதாயத்தின் பங்களிப்பை ஊக்குவிப்பது போன்ற நடவடிக்கைகளை மேற்கொண்டு குற்றச் செயல்கள் நடக்காமல் தடுப்பதற்கான நடவடிக்கைகளை எடுக்க வேண்டும் என்றும், காவல் துறையினர் முழுமையாக செயல்பட சுதந்திரம் அளிக்கப்பட்டுள்ள நிலையில். காவல்துறையினர் சட்டம் ஒழுங்கை பேணிப் பாதுகாத்து, நீதியை நிலைநாட்ட வேண்டும் என்றும் முதல்அமைச்சர் அறிவுறுத்தினார்.

இவ்வாறு அதில் கூறப்பட்டுள்ளது.

# கோவையில் திடீரென தீப்பிடித்து எரிந்த காற்றாலை



கோவை, ஜூலை 2

கோவை மாவட்டம் செலக்கரிச்சல் பகுதியில் தனியார் காற்றாலை ஒன்று செயல்பட்டு வருகிறது. இந்த நிலையில் திடீரென காற்றாலையின் இயந்திரத்தில் இருந்து புகை வெளியேறியது. இதனையடுத்து சில நிமிடங்களிலேயே தீ பற்றி எரிய தொடங்கியது. காற்றின் வேகத்தால் தீயானது காற்றாலையின் இறக்கைகளில் சூழ்ந்தது.

இந்த விபத்தை பார்த்த அப்பகுதி வாகன ஓட்டிகள் அதிர்ச்சி அடைந்தனர். இதனை அங்கிருந்த பலர் தனது செல்போனில் படம் பிடித்து சமூக வலைதளங்களில் பரப்பினர். இதனிடையே விபத்து தொடர்பாக தகவலறிந்த தீயணைப்புத்துறையினர் சம்பவ இடத்திற்கு விரைந்தனர். நீண்ட போராட்டத்திற்கு பின்னர் தீயணைப்புத்துறையினர் தீயை கட்டுக்குள் கொண்டு வந்தனர். இது தொடர்பாக வழக்குப்பதிவு செய்த போலீசார் எவ்வாறு தீ ஏற்பட்டது என விசாரித்து வருகின்றனர். கோவையில் திடீரென காற்றாலை தீப்பிடித்த சம்பவம் அப்பகுதியில் பெரும் அதிர்ச்சியை ஏற்படுத்தி உள்ளது.

# பள்ளிகளில் வாட்டர் பெல் திட்டம்: அமலுக்கு வந்தது



சென்னை, ஜூலை 2

தமிழ்நாட்டில் உள்ள பள்ளிகளில் மாணவ, மாணவிகள் தண்ணீர் அருந்துவதை உறுதி செய்யும் 'வாட்டர் பெல்' திட்டம் இன்று நடைமுறைக்கு வந்தது. அரசுப் பள்ளிகளில் மாணவர்கள் தண்ணீர் குடிப்பதை உறுதி செய்யும் வகையில், ஒவ்வொரு நாளும் காலை 11 மணிக்கு, பகல் 1 மணிக்கு, பிற்பகல் 3 மணிக்கு என 3 முறை வாட்டர் பெல் அடிக்கப்படும், அப்போது மாணவர்கள் தண்ணீர் அருந்த வேண்டும்.

வெயிலின் தாக்கத்தால் குழந்தைகளிடையே நீர்ச்சத்து குறைபாடு ஏற்படுவதைத் தடுக்கவும் நீர்ச்சத்துக் குறைபாடால் மாணவர்களின் கற்றல் திறன் பாதிக்கப்படுவதைத் தடுக்கவும் இந்த திட்டம் கொண்டுவரப்படுவதாக பள்ளிக் கல்வித்துறை தெரிவித்தது.

இந்த நிலையில், இந்த திட்டம் இன்று முதல் நடைமுறைக்கு வந்துள்ளது.

இதன்படி, காலை 11 மணி, பிற்பகல் 1 மணி, மாலை 3 மணி என பள்ளிகளில் மணி ஒலிக்கும்போது மாணவர்கள் தவறாது தண்ணீர் அருந்த வேண்டும் என்று தெரிவிக்கப்பட்டுள்ளது. வகுப்புச் சூழல் பாதிக்கப்படாத வகையில், பள்ளிகளில் 2 3 முறை வாட்டர் பெல் அடிக்க பள்ளிகளுக்கு அறிவுறுத்தப்பட்டுள்ளது. பள்ளிகளில் இந்த புதிய நடைமுறை பெற்றோர்கள் மத்தியில் வரவேற்பைப் பெற்றுள்ளது.

# விவசாயிகளுக்கு ஆதரவாக தேமுதிக கண்டன ஆர்ப்பாட்டம்

சென்னை, ஜூலை 2

தேமுதிக சார்பில் இந்த கிருஷ்ணகிரியில் உள்ள புதிய பேருந்து நிலையம் அருகே தேமுதிக பொது செயலாளர் பிரேமலதா விஜயகாந்த் தலைமையில் மா விவசாயிகளின் வாழ்வதரத்தை உயர்த்த தமிழக அரசு நடவடிக்கை எடுக்க வேண்டுமென வலியுறுத்தி கண்டன ஆர்ப்பாட்டம் நடைபெற்று வருகிறது.

இந்த ஆர்ப்பாட்டத்தில் மேடையில் மாங்காய்களை கொட்டியும், மாமரங்களில் மா விவசாயிகளின் குடும்பங்களின் உருவ பொம்மைகளை தூக்கிலிட்டு தேமுதிகவினர் ஆர்ப்பாட்டத்தில் ஈடுபட்டுள்ளனர்.

இதனால் உருவ பொம்மைகளை வைக்க போலீசார் அனுமதி மறுத்தால் அங்கு தேமுதிவினர்க்கும் போலீசாரும் இடையே சற்று நேரம் வாக்குவாதம் ஏற்பட்டது.

இதனால் அங்கு சிறிது நேரம் சலசலப்பு ஏற்பட்டது.

# திருவள்ளூர்: ரூ.75 ஆயிரம் லஞ்சம் வாங்கிய வட்டாட்சியர் கையும் களவுமாக பிடிபட்டார்



அதிகாரிகள் லஞ்ச ஒழிப்புத் துறைக்கு அளித்த தகவலின் அடிப்படையில் லஞ்ச ஒழிப்புத்துறை வழிகாட்டுதலின் பேரில் முதல் கட்டமாக 75 ஆயிரம் ரூபாயை தனி வட்டாட்சியர் எட்வர்ட் வில்சனுக்கு ஏஜென்ட்களாக செயல்பட்ட கோமதி நாயகம் மற்றும் துரை ஆகியோர் உதவியுடன் வேல்யூ ஸ்பேஸ் கம்பெனி நிறுவன ஊழியர் கொடுத்த

திருவள்ளூர் ஜூலை 2

திருவள்ளூரில் அரசு கையகப்படுத்திய இடத்திற்கு பணம் கொடுக்க 75 ஆயிரம் ரூபாய் லஞ்சம் வாங்கிய நில எடுப்பு தனி வட்டாட்சியர் எட்வர்ட் வில்சன் லஞ்ச ஒழிப்பு போலீசாரால் கையும் களவுமாக பிடிக்கப்பட்டார்.

திருவள்ளூர் மாவட்டத்தில் போக்குவரத்து நெரிசலை கட்டுப்படுத்தும் நோக்கத்தில் சாலைகளை விரிவாக்கம் செய்யும் பணிகள் கடந்த ஒரு வருடங்களுக்குமேலாகநடைபெற்று வருகிறது.

இந்த நிலையில் திருவள்ளூரில் இருந்து ஸ்ரீபெரும்புதூர் பகுதிக்கு சாலை விரிவாக்க பணிகள் நடைபெற்று வரும் நிலையில் அதற்காக நிலம் கையகப்படுத்தப்பட்டு இழப்பீட்டுத் தொகை அரசின் சார்பில் வழங்கப்பட்டு வருகிறது.

அதுபோல் திருவள்ளூர் அடுத்த போலிவாக்கம் பகுதியில் இயங்கி வரும் வேல்யூ ஸ்பேஸ் கம்பெனி என்ற நிறுவனத்திற்கு சொந்தமான இடத்தை கையகப்படுத்திய அரசு அதற்காக சுமார் 45 லட்சம் ரூபாய் இழப்பீட்டுத் தொகையாக கொடுக்க வேண்டி இருந்தது. இந்த தொகையை பல முறை நில எடுப்பு தனி வட்டாட்சியர் எட்வர்ட் வில்சனிடம் கேட்டும் அவர் காலதாமதம் செய்து வந்த நிலையில், சுமார் 1 லட்சம் ரூபாய் கொடுத்தால், இழப்பீட்டுத் தொகை 45 லட்சத்தை கொடுப்பதாக கூறியுள்ளார்.

இதனால் அதிர்ச்சி அடைந்த நிறுவனத்தின் அதிகாரிகள் லஞ்ச ஒழிப்புத் துறைக்கு அளித்த தகவலின் அடிப்படையில் லஞ்ச ஒழிப்புத்துறை வழிகாட்டுதலின் பேரில் முதல் கட்டமாக 75 ஆயிரம் ரூபாயை தனி வட்டாட்சியர் எட்வர்ட் வில்சனுக்கு ஏஜென்ட்களாக செயல்பட்ட கோமதி நாயகம் மற்றும் துரை ஆகியோர் உதவியுடன் வேல்யூ ஸ்பேஸ் கம்பெனி நிறுவன ஊழியர் கொடுத்த போது மறைந்திருந்த லஞ்ச ஒழிப்பு டி.எஸ்.பி. கணேசன் மற்றும் ஆய்வாளர் மாலா ஆகியோர் தலைமையிலான போலீசார் தனி வட்டாட்சியரை பிடித்து கைது செய்து தற்போது விசாரணை மேற்கொண்டு வருகின்றனர்.

மேலும் அவருக்கு லஞ்சமாக கொடுக்கப்பட்ட 75 ஆயிரம் ரூபாயை கைப்பற்றிய லஞ்ச ஒழிப்பு போலீசார், ஏஜென்ட்களாக செயல்பட்ட கோமதிநாயகம் மற்றும் துரை ஆகியோரையும் கைது செய்து விசாரணைநடத்திவருகின்றனர். மேலும் இதுவரை அரசு கையகப்படுத்திய நிலத்திற்கு இதுபோன்று எவ்வளவு ரூபாய் லஞ்சம் வாங்கியுள்ளனர் என்பது குறித்தும் விசாரணை மேற்கொண்டு வருகின்றனர்.

# முடிச்சூர் ஏரியில் குளிக்கச்சென்ற 10ம் வகுப்பு மாணவன் நீரில் மூழ்கி பலி

சென்னை, ஜூலை 2

செங்கல்பட்டு மாவட்டம் தாம்பரம் அருகே, புத்தர் நகரை சேர்ந்த ஹரிஹரன் என்ற 10ஆம் வகுப்பு மாணவன், தனது நண்பர்களுடன் முடிச்சூர் ஏரியில் குளிக்கச்சென்றுள்ளார். அப்போது. எதிர்பாராத விதமாக ஏரியின் ஆழமான பகுதிக்கு சென்றதால், நீரில் மூழ்கி மாயமானார்.

இது குறித்த தகவலின் அடிப்படையில், சம்பவ இடத்திற்கு வந்த தீயணைப்புதுறையினர். நீண்ட நேரமாக போராடி ஹரிஹரனின் சடலத்தை மீட்டு பிரேத பரிசோதனைக்காக அனுப்பி வைத்தனர்.

# விவசாயிகளுக்கு ரூ. 297 கோடி ஊக்கத்தொகை: அரசாணை வெளியீடு



சென்னை, ஜூலை 2

தமிழக அரசு வெளியிட்டுள்ள செய்திக்குறிப்பில் தெரிவித்திருப்பதாவது:

கரும்பு விவசாயிகளின் நலன் மற்றும் சர்க்கரை ஆலைகளின் வளர்ச்சிக்கு தமிழ்நாடு முதல்அமைச்சரின் தலைமையிலான அரசு பல்வேறு திட்டங்களை செயல்படுத்தி வருகிறது. தமிழ்நாட்டில்16கூட்டுறவு, 2 பொதுத்துறை, 22 தனியார் என மொத்தம் 40 சர்க்கரை ஆலைகள் உள்ளன.

தமிழ்நாடுமுதல்அமைச்சரின் உத்தரவிற்கிணங்க, கடந்த மாதத்தில் எட்டு கூட்டுறவு சர்க்கரை ஆலைகளைச் சார்ந்த 5,920 கரும்பு விவசாயிகளுக்கு ரூ.97.77 கோடி கரும்பு கிரயத் தொகை வழங்கப்பட்டது. மேலும், கரும்பு விவசாயிகளின் மீது அக்கறை கொண்ட இவ்வரசு கரும்பு சாகுபடி பரப்பை அதிகரிப்பதற்காகவும், சர்க்கரை ஆலைகளின் செயல்திறனை மேம்படுத்துவதற்கும் பல்வேறு ஆக்கப்பூர்வமான நடவடிக்கைகளை எடுத்து வருகிறது.

கரும்புக்கு சிறப்பு ஊக்கத் தொகையாக டன் ஒன்றுக்கு ரூ.349/

தமிழ்நாடு முதல்அமைச்சரின் ஆணையின்படி, 2021 ஆம் ஆண்டு முதல், தமிழக அரசு கரும்பு விவசாயிகளுக்கு ஒவ்வொரு ஆண்டும் சிறப்பு ஊக்கத்தொகை வழங்கி வருகிறது. இதன் தொடர்ச்சியாக, முன்எப்போதும் இல்லாத அளவிற்கு, 202526 ஆம் ஆண்டு வேளாண்மை நிதி நிலை அறிக்கையில், 202425 அரவைப்பருவத்தில் 12 கூட்டுறவு, 2 பொதுத்துறை மற்றும் 16 தனியார் துறை சர்க்கரை ஆலைகளுக்கு கரும்பு வழங்கிய விவசாயிகளுக்கு டன்னுக்கு ரூ.349/ சிறப்பு ஊக்கத்தொகையாக வழங்கப்படும் என்று அறிவிக்கப்பட்டது.

தற்போது, கரும்பிற்கு சிறப்பு ஊக்கத்தொகையாக டன் ஒன்றுக்கு ரூ.349/ வழங்கிடும் வகையில், ரூ.297/கோடி நிதியினை ஒதுக்கி அரசாணை வெளியிடப்பட்டுள்ளது.

அரசு வெளியிட்டுள்ள இந்த ஆணையின்படி, 202425 அரவைப் பருவத்தில், சர்க்கரை ஆலைகளுக்கு கரும்பு வழங்கிய சுமார் ஒரு லட்சத்து முப்பதாயிரம்கரும்புவிவசாயிகள் பயனடைவார்கள். இந்த சிறப்பு ஊக்கத்தொகை தகுதி வாய்ந்த கரும்பு விவசாயிகளின் வங்கி கணக்கிற்கு நேரடியாக விரைவில் வழங்கிட உரிய நடவடிக்கைகள் எடுக்கப்பட்டு வருகிறது. கடந்த நான்கு ஆண்டுகளில் சிறப்பு ஊக்கத்தொகையாக 4,79,030 கரும்பு விவசாயிகளுக்கு மொத்தம் ரூ.848.16/கோடி வழங்கப்பட்டுள்ளது.

202425 அரவைப்பருவத்திற்கு கரும்பு வழங்கிய சுமார் 1,30,000 விவசாயிகளுடன் சேர்த்து, கடந்த 4 ஆண்டுகளில் 6,09,030 கரும்பு விவசாயிகள் ரூ.1,145.12 கோடி சிறப்பு ஊக்கத்தொகை பெற்று பயனடைய வழிவகை செய்யப்பட்டுள்ளது.

தமிழ்நாடுமுதல்அமைச்சரின் தலைமையிலான அரசு பொறுப்பேற்றது முதல், கடந்த நான்கு ஆண்டுகளில் மட்டும், வரலாற்றில் முதன்முறையாக சிறப்பு ஊக்கத்தொகை மற்றும் கரும்பு கிரய நிலுவைத் தொகை வழங்க சுமார் 1,945.25/ கோடி வழங்கப்பட்டுள்ளது.

இவ்வாறு அதில் கூறப்பட்டுள்ளது.

# திருச்செந்தூர் கோயில் குடமுழுக்கு விழாவுக்கு சிறப்பு ரெயில் இயக்கம்

தூத்துக்குடி, ஜூலை 2

திருச்செந்தூர் முருகன் கோவிலில் 14 ஆண்டுகளுக்குப்பின் குடமுழுக்கு விழா வரும் 7ம் தேதி நடைபெறுகிறது. கோவில் குடமுழுக்கையொட்டி தமிழகம் முழுவதிலும் இருந்து 5 லட்சத்திற்கும் அதிகமான பக்தர்கள் திருச்செந்தூர் வருவார்கள் என எதிர்பார்க்கப்படுகிறது.

திருச்செந்தூர் கோயில் குடமுழுக்கு விழாவை முன்னிட்டு, நெல்லைதிருச்செந்தூர் இடையே சிறப்பு ரெயில் இயக்கப்பட உள்ளதாக தெற்கு ரெயில்வே அறிவித்துள்ளது. அதன்படி, நெல்லையில் இருந்து காலை 9.15க்கு புறப்படும் சிறப்பு ரெயில், 10.50 மணிக்கு திருச்செந்தூரை அடைய உள்ளது. மறு மார்க்கமாக காலை 11.20க்கு புறப்படும் ரயில் மதியம் 12.55க்கு நெல்லையை வந்தடைய உள்ளது.

# பங்குச்சந்தை மோசடி இன்ஸ்டா பிரபல தம்பதி மீது வழக்கு



சென்னை, ஜூலை 2

சென்னை விருகம்பாக்கத்தை சேர்ந்தவர் விஷ்ணு. இன்ஸ்டா பிரபலமான இவர், ஆன்லைன் டிரேடிங்கில் கோடிக்கணக்கான ரூபாய் மோசடி செய்ததாக எழுந்த புகாரின்பேரில் கைதாகி சிறையில் உள்ளார்.

இந்த நிலையில், ஆன்லைன் டிரேடிங் என்ற பெயரில் விஷ்ணு, அவரது மனைவி அஸ்மிதா ஆகியோர் தன்னிடம் மோசடி செய்ததாக சந்திரசேகரன் என்பவர் சென்னை காவல் ஆணையத்தில் புகார் அளித்தார். ஒரே குடும்பத்தைச் சேர்ந்தவர்களிடம் தனித்தனியாக பழகி பணம் பெற்று மோசடியில் விஷ்ணுவின் குடும்பம் ஈடுபட்டதாக புகாரில் தெரிவிக்கப்பட்டது. இதையடுத்து ஆன்லைன் டிரேடிங் செய்வதாகக் கூறி ரூ.1.62 கோடி மோசடி செய்த இன்ஸ்டா பிரபலம் விஷ்ணு, அவரது மனைவி அஸ்மிதா, விஷ்ணுவின் தாய் ஆனந்தி மற்றும் தங்கை ஸ்ரீவித்யா ஆகிய 4 பேர் மீதும் சென்னை மத்திய குற்றப்பிரிவு போலீசார் வழக்குப் பதிவு செய்துள்ளனர்.

# தந்தைக்கு இருக்கும் அனுபவத்தை அன்புமணி பயன்படுத்தி கொள்ளவேண்டும் திருமாவளவன்



மதுரை ஜூலை 2

விடுதலை சிறுத்தைகள் கட்சியின் தலைவர் திருமாவளவன் இன்று மதுரை விமான நிலையத்தில் செய்தியாளர்களைச் சந்தித்தார். அப்போது அவர் கூறியதாவது:

அ.தி.மு.க.வை எந்தக் கொம்பனாலும் கபளீகரம் செய்ய முடியாது என்ற கருத்தைச் சொல்லும் அ.தி.மு.க. பொதுச்செயலாளர் எடப்பாடி பழனிசாமி, யார் கபளீகரம் செய்ய முயற்சிக்கின்றனர் என்பதை தெளிவுபடுத்த வேண்டும். பா.ஜ.க. அ.தி.மு.க. இடையே இணைப்பு உள்ளதே தவிர, பிணைப்பு இருப்பதாக தெரியவில்லை.

திருமாவளவனுக்கு ராமதாஸ் மீது திடீரென என்ன பாசம் என அன்புமணி கேட்கிறார். பாசம் என்பது ஒரு வலிமையான வார்த்தை. நாங்கள் குறிப்பிட்டது அந்த அடிப்படையால் அல்ல; தந்தை மகனுக்கு இடையே இடைவெளி பெரிதாகி விடக்கூடாது என்ற அடிப்படையில் சொல்லப்பட்ட ஒரு பொறுப்பான வார்த்தை அவ்வளவு தான். தந்தைக்கு இருக்கும்அனுபவம், ஆளுமையை அன்புமணி பயன்படுத்திக் கொள்ள வேண்டும்.

பா.ம.க. இங்கே எளிய மக்களுக்காக போராடுகிற கட்சி என்று நம்புவதால் அவர்களுக்கு இடையே இடைவெளி ஏற்பட்டு விடக்கூடாது. அந்த இடைவெளியை பயன்படுத்தி பாசிச சக்திகள் உள்ளே நுழைந்து விடக்கூடாது. சனாதன சக்திகள் அதை தங்களுக்கு சாதகமாக பயன்படுத்திக் கொள்ள முயற்சிக்கிறார்கள், எச்சரிக்கையாக இருங்கள். இவ்வாறு அவர் கூறினார்.

# பள்ளி மாணவியிடம் பாலியல் அத்துமீறலில் ஈடுபட்ட ஆசிரியருக்கு 7 ஆண்டுகள் சிறை

தருமபுரி, ஜூலை 2

தருமபுரி மாவட்டம் தங்கவேல் தெருவைச் சேர்ந்த பிரகாஷ் குமார் (54). இவர் வெள்ளிச்சந்தையில் உள்ள அரசு நடுநிலைப் பள்ளியில் கணித ஆசிரியராக பணிபுரிந்து வந்துள்ளார். இந்நிலையில் கடந்த 19.11.2019ம் தேதி அதே பள்ளியில் 6ம் வகுப்பு படித்து வந்த 10வயது சிறுமியிடம் பாலியல் அத்துமீறலில் ஈடுபட்டுள்ளார். இது குறித்து பாதிக்கப்பட்ட சிறுமியிடம் பாலியல் அத்துமீறலில் ஈடுபட்டுள்ளார்.

இதுகுறித்து மாணவி தனது பெற்றோரிடம் கூறவே பாதிக்கப்பட்ட சிறுமியின் தாய் பென்னாகரம் அனைத்து மகளிர் காவல் நிலையத்தில் புகார் அளித்தார். இந்த புகாரின் பேரில் போலீசார் போக்சோ சட்ட பிரிவின் கீழ் வழக்குப்பதிவு செய்தனர். இதையடுத்து பிரகாஷ் குமார்தருமபுரி மகிளா விரைவு நீதிமன்ற த்தில் சரணடைந்தார். மேலும் காவல்துறை இவ்வழக்கின் புலன் விசாரணையை முடித்து மாவட்ட சிறப்பு போக்சோ நீதிமன்றத்தில் குற்றப்பத்திரிக்கை தாக்கல் செய்தது. இவ்வழக்கை விசாரித்த தருமபுரி மாவட்ட சிறப்பு போக்சோ நீதிமன்ற பொறுப்பு நீதிபதி, இன்று பிரகாஷ் குமாரை குற்றவாளியாக அறிவித்து 7 ஆண்டுகள் சிறை தண்டனை மற்றும் ரூ. 15,000/அபராதமும் விதித்து தீர்ப்பளித்தார்.

# மதுரை ரெயில் நிலையத்தில் தண்டவாளத்தை கடக்க முயன்ற பெண் ரெயில் மோதி பலத்த காயம்



மதுரை ஜூலை 2

மதுரை ரெயில் நிலையத்தில் தண்டவாளத்தைக் கடக்க முயன்ற பெண் மீது விரைவு ரெயில் மோதியதில் பலத்த காயமடைந்த சம்பவம் பரபரப்பை ஏற்படுத்தியுள்ளது.

ஐதராபாத்தில் இருந்து நாகர்கோவிலுக்கு ஒவ்வொரு வாரமும் ஞாயிற்றுக் கிழமைகளில் வாராந்திர ரெயில் இயக்கப்படுகிறது. அதன்படி நேற்று ஐதராபாத்தில் இருந்து புறப்பட்ட ரெயிலானது இன்று மதியம் 3 மணியளவில் மதுரை ரெயில் நிலையம் வந்தடைந்தது. அங்கு பயணிகளை இறக்கிவிட்ட பின்னர் நாகர்கோவில் செல்வதற்காக புறப்பட்டது.

இந்த நிலையில் கேரள மாநிலத்தைச் சேர்ந்த ராணி என்கிற 40 வயது மதிக்கத்தக்க பெண் ஒருவர் தண்டவாளத்தை கடக்க முற்பட்டுள்ளார். அப்போது ஐதராபாத்திலிருந்து வந்த விரைவு ரெயில் அவர் மீது மோதியது. பின்னர் உடனடியாக ரெயில் நிறுத்தப்பட்டது. இதில் அந்த பெண்ணுக்கு தலையில் பலத்த காயம் ஏற்பட்டது.

உடனடியாக அங்கிருந்த பயணிகள், ரெயில்வே போலீசார் மற்றும் மருத்துவக் குழுவினர் அந்தப் பெண்ணை மீட்டு முதலுதவி அளித்தனர்.

பின்னர் அந்த பெண் சிகிச்சைக்காக மதுரை அரசு ராஜாஜி மருத்துவமனைக்கு அழைத்துச் செல்லப்பட்டார். தற்போது அவர் உயிருக்கு ஆபத்தான நிலையில் மருத்துவமனையில் சிகிச்சை பெற்று வருகிறார்.

தினகனி

Namadhu dhina kani daily morning newspaper
Press register general of India
PRGI NO TNTAM/2023/88253

2.7.2025

## வலிப்பு ஏற்பட்டு அஜித்குமார் இறப்பு: முதல் தகவல் அறிக்கை



மதுரை, ஜூலை 2

மதுரை மாவட்டம் திருமங்கலத்தை சேர்ந்தவர்நிகிதா (வயது 41). இவர் தனது தாயாருடன் சிவகங்கை மாவட்டம் மடப்புரத்தில் உள்ள பத்திரகாளி அம்மன்கோவிலுக்குகாரில்சென்றார். அங்கு காவலாளியாக இருந்த அஜித்குமாரிடம் (28), தனது காரை ஓரமாக நிறுத்துமாறு கூறி சாவியை கொடுத்தார். அதற்கு அவர், தனக்கு கார் ஓட்ட தெரியாது எனக்கூறி வேறு ஒருவர் மூலம் காரை ஓரமாக நிறுத்தினாராம்.

அதன்பின் கோவிலுக்குள் சென்று சாமி தரிசனத்தை முடித்து நிகிதா வெளியில் வந்தார். காவலாளி அஜித்குமாரிடம் இருந்து சாவியை வாங்கி காரை திறந்து பார்த்தார். அப்போது காரில் இருந்த 9½ பவுன் நகை மாயமானதாக கூறி அதிர்ச்சி அடைந்தார். இதுகுறித்து அவர் திருப்புவனம் போலீசில் புகார் அளித்தார்.

இதுகுறித்து விசாரணை நடத்த மானாமதுரை குற்றப்பிரிவு தனிப்படை போலீசார் நியமிக்கப்பட்டனர். அதன்பேரில் தனிப்படை போலீசார், மடப்புரம் கோவில் காவலாளி அஜித்குமார் உள்பட சிலரை அழைத்து விசாரித்தனர். பின்னர் அஜித்குமாரை தவிர மற்றவர்களை அனுப்பி வைத்தனர். நகை மாயமானது குறித்து தொடர்ந்து அஜித்குமாரிடம் போலீசார் விசாரணை நடத்தி வந்தனர். இதற்கிடையே திடீரென அஜித்குமாருக்கு உடல்நலக்குறைவு ஏற்பட்டதாக கூறி அவரை சிவகங்கை ஆஸ்பத்திரிக்கு அழைத்து சென்றனர். அங்கிருந்த டாக்டர்களின் அறிவுறுத்தலின்படி மதுரை தனியார் ஆஸ்பத்திரிக்கு அவரை கொண்டு சென்றனர். அங்கு அவரை பரிசோதித்த டாக்டர்கள், அவர் இறந்துவிட்டதாககூறியுள்ளனர். இதனால் அவரது உடலை அங்குள்ள பிரேத பரிசோதனை கூடத்திற்கு அனுப்பி வைத்தனர்.

இந்தநிலையில், விசாரணைக்காக அழைத்துச் சென்ற இளைஞா் உயிரிழந்ததையடுத்து, 6 போலீசாரை பணியிடை நீக்கம் செய்து, மாவட்ட காவல் கண்காணிப்பாளா் ஆஷிஷ் ராவத் ஞாயிற்றுக்கிழமை உத்தரவிட்டாா்.

திருப்புவனத்தில் காவல்துறை விசாரணையில் இளைஞர் உயிரிழந்த வழக்கு, இப்போது சிபிசிஐடி விசாரணைக்கு மாற்றப்பட்டுள்ளது. அஜித் குமாரின் குடும்பத்தினரின் போராட்டத்தையடுத்து இந்த சம்பவத்தில் காவல்துறையைச் சேர்ந்த 6 பேர் சஸ்பெண்ட் செய்யப்பட்டுள்ளனர். இதனிடையே உடற்கூராய்வில் அஜித்குமாரின் உடலில் 18 இடங்களில் காயம் இருந்ததாகத் தகவல் தெரிவிக்கப்பட்டுள்ளது.

இந்தநிலையில் வலிப்பு ஏற்பட்டு இளைஞர் உயிரிழந்ததாக முதல் தகவல் அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளது .போலீசாடமிருந்து தப்பிக்க அஜித்குமார் முயற்சித்ததாகவும் அப்போது கீழே விழுந்ததில் அஜித்குமாருக்கு வலிப்பு ஏற்பட்டதாகவும் இதனாலேயே அஜித்குமார் உயிரிழந்தார் என்றும் தெரிவிக்கப்பட்டுள்ளது. இவ்விவகாரத்தில் 5 காவலர்கள் கைது செய்யப்பட்டிருப்பதாகவும் அதிகாரிகள் தரப்பிலிருந்து உறுதிபடுத்தப்படாத தகவல்கள் தெரிவிக்கின்றன. உடற்கூராய்வில் அஜித் குமாரின் உடலில் 18 இடங்களில் காயம் இருந்ததாகத் தெரிவிக்கப்பட்டுள்ள நிலையில், இந்த வழக்கை கொலை வழக்காக மாற்றி விசாரணை முடுக்கிவிடப்பட்டு ள்ளதாகவும் தகவல்கள் தெரிவிக்கின்றன.

## திமுக கூட்டணியில் மதிமுக தொடர்ந்து நீடிக்கும் வைகோ உறுதி

சென்னை, ஜூலை 2

மதிமுக பொதுச் செயலாளர் வைகோ செய்தியாளர்களிடம் செந்திப்பில்கூறியதாவது; "கலைஞர் மரணப்படுக்கையில் இருக்கும்போது, முதல்அமைச்சர் மு.க. ஸ்டாலினுக்கு இனிமேல் நான் உறுதுணையாக இருப்பேன் என அவருக்கு கொடுத்த வாக்குறுதியை கடைசிவரை காப்பேன். திமுகவுக்கு வெற்றியை தேடித்தர மதிமுக பாடுபடும். எதிர்வரும் 2026 தேர்தலில் திமுக தனிப்பெரும்பான்மை பெறும்." இவ்வாறு வைகோ தெரிவித்துள்ளார்.



## கல்லூரி மாணவிக்கு பாலியல் தொந்தரவு கொடுத்த பல் மருத்துவர் கைது



காஞ்சிபுரம் ஜூலை 2

காஞ்சிபுரத்தில் கல்லூரி மாணவிக்குபாலியல்தொந்தரவு கொடுத்த பல் மருத்துவரை போலீசார் கைது செய்து விசாரணைநடத்திவருகின்றனர்.

காஞ்சிபுரம் அருகே திருப்பருத்திக்குன்றம் பகுதியைச் சேர்ந்தவர் மணிகண்டன்(29 வயது). இவர் காஞ்சிபுரம் பூக்கடைசத்திரம்பகுதியில்சொந்தமாகபல்மருத்துவமனை நடத்தி வருகிறார். இவரிடம் தனியார் கல்லூரியில் பி.எஸ்.சி. 3வது ஆண்டு படிக்கும் 20 வயது மாணவி ஒருவர் பல் மருத்துவ சிகிச்சை பெற வந்திருந்தபோது அவருக்கு பாலியல் தொந்தரவு கொடுத்துள்ளார்.

உடனடியாக பல் மருத்துவமனையை விட்டு வெளியேறிய மாணவி, சிவகாஞ்சி காவல் நிலையத்தில் புகார் செய்துள்ளார். அவரது புகாரின்பேரில் போலீசார் விசாரணைநடத்தினர்.அதில்மணிகண்டன்குற்றச்செயலில் ஈடுபட்டது உறுதியானது. இதையடுத்து பல் மருத்துவர் மணிகண்டனை சிவகாஞ்சி காவல் நிலைய ஆய்வாளர் சிவக்குமார் கைது செய்து கோர்ட்டில் ஆஜர்படுத்தி சிறையில் அடைத்தார்.

## ஏ.ஆர்.ரகுமானை சந்தித்தது ஏன்? மத்திய மந்திரி எல்.முருகன் விளக்கம்



சென்னை ஜூலை 2

திருவள்ளூர் மாவட்டம் கும்மிடிப்பூண்டி அருகே உள்ள அய்யர்கண்டிகையில் இசையமைப்பாளர் ஏ.ஆர்.ரகுமானை மத்திய இணை மந்திரி எல்.முருகன் சந்தித்து பேசினார். அண்மையில் டெல்லியில் துணை ஜனாதிபதி ஜெகதீப் தன்கரை நடிகை மீனா சந்தித்தது பேசுபொருளான நிலையில், இசையமைப்பாளர் ஏ.ஆர்.ரகுமான் மத்திய இணை மந்திரி எல்.முருகன் இடையேயான சந்திப்பு அரசியல் வட்டாரத்தில் பரபரப்பை ஏற்படுத்தியுள்ளது.

அய்யர்கண்டிகையில் ஏ.ஆர்.ரகுமான் பிரமாண்ட ஸ்டுடியோ கட்டியுள்ளார். இந்த ஸ்டுடியோவை நேரில் பார்வையிட வருமாறு மத்திய இணை மந்திரி எல்.முருகனுக்கு ஏ.ஆர்.ரகுமான் அழைப்பு விடுத்திருந்ததாக கூறப்படுகிறது. இதையடுத்தே மந்திரி எல்.முருகன் அங்கு சென்று பார்வையிட்டுள்ளார்.

இதுகுறித்து மந்திரி எல்.முருகன் செய்தியாளர்களிடம் கூறுகையில், "உலகளவில் சிறந்த தொழில்நுட்பங்களுடன் கட்டப்பட்டுள்ள மிகப்பெரிய ஸ்டுடியோவை ஏ.ஆர்.ரகுமான் கட்டியுள்ளார். மத்திய தகவல் மற்றும் ஒளிபரப்பு துறை இணை மந்திரி என்ற முறையில் நேரில் சென்று பார்த்தேன். இதில் அரசியல் இல்லை" என்றார்.

## இன்றைய ராசி பலன்கள் (2.7.2025)

**மேஷம்:** உழைப்பிற்கு TODAY நல்ல பரிசு கிடைக்கும். வேலை வாய்ப்பு தேடுவோருக்கு சிறந்த வாய்ப்பு. குடும்பத்தில் மகிழ்ச்சி நிலவும்.

**ரிஷபம்:** நிதி நிலை சீராகும். பழைய கடன்கள் தீர்க்கப்படும். வீட்டில் சிலசின்னசிக்கல்கள்இருந்தாலும் நீடிக்காது.

**மிதுனம்:** புதிய முயற்சியில் வெற்றி. வியாபாரத்தில் லாபம். பழைய நண்பரிடமிருந்து நல்ல செய்தி வரும்.

**கடகம்:** உடல் ஆரோக்கியத்தில் சிறு கவலை. மன அழுத்தம் இருக்கும். ஆனாலும் குடும்ப ஆதரவு கிடைக்கும்.

**சிம்மம்:** வாழ்க்கையில் முன்னேற்றம். அலுவலகத்தில் உங்கள் கருத்து மதிக்கப்படும். பணவரத்து திருப்திகரமாக இருக்கும்.

**கன்னி:** அறிவுக் கூர்மை அதிகரிக்கும். போட்டிப் பரீட்சை எழுதுபவர்களுக்கு சாதகமான நாள். உணவில் கவனம் தேவை.

**துலாம்:** வீட்டு வேலைகளில் பிஸியாக இருப்பீர்கள். உறவுகளில் அன்பும் பாசமும் அதிகரிக்கும். வீண் சண்டைகளை தவிர்க்கவும்.

**விருச்சிகம்:** சிறந்த வாய்ப்பு காத்திருக்கிறது. தொழிலில் லாபம். பழைய சிக்கல்கள் தீரும். நண்பர்களுடன் சந்தோஷமான சந்திப்பு.


**தனுசு:** புதிய திட்டங்களை தொடங்க நல்ல நேரம். மனைவி/கணவருடன் நேரம் செலவிடுவதால் உறவு மேம்படும்.

**மகரம்:** செயல்களில் சீரும் சுகமும் இருக்கும். நிலம் தொடர்பான விஷயங்களில் சாதகமான தீர்வு. பண வரவு உயரும்.

**கும்பம்:** சிறு சிக்கல்கள் இருந்தாலும், நீங்கள் புத்திசாலித்தனமாக தீர்வுகளை காண்பீர்கள். நண்பர்களிடம்உதவிகிடைக்கும்.

**மீனம்:** இனிமையான நாள். கல்யாணம் தொடர்பான விஷயங்களில் முன்னேற்றம். பயணம் ஒருவேளை ஏற்படலாம்.

## ரெயில்கட்டண உயர்வை திரும்ப பெறவேண்டும் அன்புமணி ராமதாஸ்



சென்னை, ஜூலை 2

பாமக தலைவர் அன்புமணி ராமதாஸ் வெளியிட்டுள்ள அறிக்கையில் கூறப்பட்டு இருப்பதாவது;

"இந்தியா முழுவதும் நாளை முதல் தொடர்வண்டிக் கட்டணம் உயர்த்தப்படுவதாக அறிவிக்கப்பட்டிருக்கிறது. புறநகர் தொடர்வண்டிகளிலும், சாதாரண தொடர்வண்டிகளில் 500 கி.மீ வரையிலும் கட்டணம் உயர்த்தப்படாத நிலையில், விரைவு வண்டிகளில்சாதாரணவகுப்புகளில்கிலோமீட்டருக்கு ஒரு பைசா வீதமும், குளிரூட்டி வசதி கொண்ட தொடர்வண்டிகளில்கிலோமீட்டருக்கு 2 பைசா வீதமும் கட்டண உயர்வு அறிவிக்கப்பட்டுள்ளது.

தமிழ்நாட்டிற்குள் அதிகபட்ச பயணதூரமான சென்னையிலிருந்து கன்னியாகுமரிக்கு சாதாரண தொடர்வண்டிகளில் பயணம் செய்ய 5 ரூபாயும், விரைவு வண்டிகளின் சாதாரண வகுப்புகளில் பயணிக்க 8 ரூபாயும், குளிரூட்டி வசதி கொண்ட பெட்டிகளில் பயணிக்க 15 ரூபாயும் கூடுதலாக கட்டணம் செலுத்த வேண்டியிருக்கும். ஒப்பீட்டளவில் இந்தக் கட்டண உயர்வு பெரிதல்ல. ஆனாலும் இந்த சுமை கூட மக்கள் மீது சுமத்தப்படக் கூடாது என்பது தான் பாட்டாளி மக்கள் கட்சியின் நிலைப்பாடு ஆகும்.

மேலும் இந்தக் கட்டண உயர்வின் மூலம் தொடர்வண்டித்துறைக்கு கிடைக்கும் கூடுதல் வருமானமான ரூ.1,100 கோடி என்பது, நடப்பாண்டில் பயணியர் போக்குவரத்தின் மூலம் கிடைக்கும் மொத்த வருமானமான ரூ. 92,800 கோடியில் 1.18% மட்டும் தான். இதை வேறு ஆதாரங்களின் மூலம் மக்களுக்கு பாதிப்பில்லாமல் திரட்ட முடியும். எனவே, தொடர்வண்டிக்கட்டணஉயர்வை ரயில்வே வாரியம் உடனடியாக திரும்பப் பெற வேண்டும் என்று வலியுறுத்துகிறேன்."

இவ்வாறுஅதில்தெரிவிக்கப்பட்டுள்ளது.

## விஜய் ஆண்டனியின் "மார்கன்" பட வசூல் இத்தனை கோடியா?





விஜய் ஆண்டனி ஆரம்பத்தில் இசையமைப்பாளராகதிரைத்துறையில்நுழைந்தவர். பின்னர் நடிப்பதிலும் ஆர்வம் கொண்டு "சலீம், இந்தியா பாகிஸ்தான், பிச்சைக்காரன்" உள்ளிட்ட படங்களின் மூலம் ரசிகர்கள் மத்தியில் பிரபலமடைந்தார். இவர் தற்போது 'அட்டக்கத்தி, பீட்சா, சூது கவ்வும், இன்று நேற்று நாளை, மாயவன்' உள்ளிட்ட படங்களில் எடிட்டராக பணிபுரிந்த லியோ ஜான் பால் இயக்கத்தில் 'மார்கன்' படத்தில் நடித்துள்ளார்.

'மார்கன்' படம் கிரைம் திரில்லர் கதைக்களத்தில் உருவாகியுள்ளது. இப்படம் கடந்த 27ம் தேதி திரையரங்குகளில் வெளியானது. விஜய் ஆண்டனியுடன் இணைந்து அஜய், சமுத்திரக்கனி, பிரகிடா, தீப்ஷிகா என பலரும் இப்படத்தில் நடித்துள்ளனர்.

உலகளவில் ரசிகர்கள் மத்தியில் நல்ல வரவேற்பை பெற்றுள்ள இப்படம் கடந்த இரண்டு நாட்களில் ரூ. 3 கோடி வசூல் செய்துள்ளதாக தகவல் வெளியாகியுள்ளது.

## ஜீவாவின் 45வது படப்பிடிப்பு பூஜை அப்டேட்




'ஆசை ஆசையாய்' படத்தின்மூலம்தமிழ்சினிமாவில்அறிமுகமானவர் நடிகர் ஜீவா. இவர் 'சிவா மனசுல சக்தி, கற்றது தமிழ், கொரில்லா, ரவுத்திரம், கலகலப்பு2 போன்றபடங்களில்நடித்துதனக்கெனரசிகர்களை உருவாக்கி வைத்துள்ளார். கடைசியாக இவர் பிளாக் படத்தில் நடித்திருந்தார். இப்படம் நல்ல வரவேற்பை பெற்றது.

இப்படத்தையடுத்து ஜீவா, பா.விஜய் இயக்கத்தில் 'அகத்தியா' படம் கலவையான விமர்சங்களை பெற்றது.

இந்நிலையில் நடிகர் ஜீவா நடிக்கும் 45வது படத்தின் பூஜை சமீபத்தில் நடைபெற்றது. மலையாளத்தில் வெளியாகி வெற்றிபெற்ற பேலிமி படத்தின் இயக்குநர் நிதிஷ் சகாதேவ் இயக்கத்தில் இப்படம் உருவாகிறது. படத்தின் படப்பிடிப்பு பூஜையுடன் துவங்கியுள்ளது. ஜீவாவுடன் தம்பி ராமையா, பிரார்தனா உள்ளிட்டோர் நடிக்கின்றனர். குடும்பப் பின்னணி கதையாக உருவாகலாம் என எதிர்பார்க்கப்படுகிறது.

## இசையமைப்பாளர் ஹாரிஸ் ஜெயராஜை கவுரவித்த கனடா

மின்னலே படத்தின் மூலம் இசையமைப்பாளராக அறிமுகமான ஹாரிஸ் ஜெயராஜ் தமிழ்த் திரையிசை உலகையே பெரும் வியப்பில் ஆழ்த்தினார். படத்தில் இடம்பெற்ற ஒன்பது பாடல்களும் மிகப் பெரும் வெற்றியைப் பெற்றன. பின்னணி இசையும் தீம் இசைத் துணுக்குகளும்கூட ரசிகர்களைப் பெரிதும் கவர்ந்தன. இதற்கு முன்பே சில படங்களில் பாடல்களை எழுதியிருப்பவரான தாமரை இந்தப் படத்தில் எழுதிய 'வசீகரா', 'இவன் யாரோ' உள்ளிட்ட பாடல்களின் மூலம்அனைவராலும்கவனிக்கப்பட்டார். இந்தப்படத்துக்குப்பிறகுகவுதம்ஹாரிஸ்தாமரைகூட்டணிதமிழ்சினிமாவில் தவிர்க்க முடியாத வெற்றிக் கூட்டணிகளில் ஒன்றாக இன்றளவும் திகழ்கிறது.

ஹாரிஸ் பாடல்கள் என்றாலே தனித்துவம்தான். தற்போது இசையமைக்கும் படங்கள் குறைவு என்றாலும், இசை நிகழ்ச்சியை நடத்தி வருகிறார். அந்த வகையில் அண்மையில் நடத்திய இசை நிகழ்ச்சிக்கு மிகப்பெரிய அங்கீகாரம் கிடைத்திருக்கிறது.

சமீபத்தில் இசையமைப்பாளர் ஹாரிஸ் அளித்த பேட்டியில் "துப்பாக்கி படத்திற்கு பிறகு விஜய் நடிக்க கூடிய பத்து படங்களை தவிர்த்தேன். என்னால், ஆயிரம் கமிட்மெண்டோடு பல படங்களுக்கு இசையமைக்கும் ஜாம்பவான் கிடையாது. ஒரு படத்தில் இசையமைத்தாலும் துல்லியமாக பிடித்து செய்ய வேண்டும். எல்லோரும் என்னிடம் இப்போது படம் செய்வது இல்லை ஏன்? தொடர் தோல்வி படங்களாக இருக்கிறதா? என்று கேட்கிறார்கள். அப்படியெல்லாம் இல்லை, பிடித்த படங்களை பிடித்த நேரத்தில் செய்துகொண்டிருக்கிறேன்" என தெரிவித்தார்.

இசையமைப்பாளர் ஹாரிஸ் தற்போது உலகெங்கும் இசை நிகழ்ச்சியை நடத்தி வருகிறார். அண்மையில் கோவையில் இவர் நடத்திய இசை நிகழ்ச்சி பெரிய அளவில் வரவேற்பை பெற்றது. ரசிகர்கள் அவரது பாடல்களை கேட்டு மயங்கி போனார்கள். அந்த அளவிற்கு வைப்போடும் இசை நிகழ்ச்சியை ஹாரிஸ் நடத்தியிருந்தார். இதைத்தொடர்ந்து தமிழ்நாட்டையும் தாண்டி சிங்கப்பூர், மலேசியா, போன்ற நாடுகளிலும் கான்சர்ட் நடத்தி வருகிறார்.

பலநாடுகளில்இசைநிகழ்ச்சியைநடத்திவரும்ஹாரிஸ்ஜெயராஜிற்குரசிகர்கள்கொடுக்கும்அன்புவிலைமதிப்பில்லாதது. அண்மையில் கனடா நாட்டின் டொரண்டோவில் தனது இசைக்குழுவுடன் கான்சர்ட் செய்திருந்தார். இதற்காக அந்நாட்டு அரசு ஹாரிஸ் ஜெயராஜை கவுரவித்திருக்கிறது. இதுதொடர்பான புகைப்படங்கள் வெளியாகிள்ளது. இதற்கு அவரது ரசிகர்கள் வாழ்த்து தெரிவித்துள்ளனர்.

## கொடூர கார் விபத்து: அறுவை சிகிச்சைக்கு முன் ரிஷப் பண்ட் என்னிடம் கேட்ட முதல் கேள்வி இதுதான் மருத்துவர் தகவல்



இந்திய கிரிக்கெட் அணியின்நம்பிக்கை நட்சத்திரவிக்கெட் கீப்பர்பேட்ஸ்மேனாக ரிஷப் பண்ட் செயல்பட்டு வருகிறார். குறிப்பாக டெஸ்ட் போட்டிகளில் சிறப்பான ஆட்டத்தை வெளிப்படுத்தி வருகிறார். கடந்த 2022ம் ஆண்டு இறுதியில் சாலை விபத்தில்சிக்கிபெரியபாதிப்பைசந்தித்திருந்தரிஷப்பண்ட்ஒன்றரைஆண்டுகளுக்குப் பிறகு மீண்டும் கிரிக்கெட் களத்திற்கு திரும்பினார்.

அந்த வாய்ப்பிலும் மிகச்சிறப்பான ஆட்டத்தை வெளிப்படுத்தி இருந்தார். அவரது இந்த கம்பேக் அனைவரது பார்வையையும் திரும்ப வைக்கும் வகையில் அமைந்தது. அந்த காரணத்தினால் டி20 உலகக்கோப்பை தொடருக்கான இந்திய அணியிலும் அவர் இடம்பிடித்து கோப்பையை வெல்ல உதவினார். தற்போது இங்கிலாந்து டெஸ்ட் தொடரிலும் அசத்தி வருகிறார்.

இந்நிலையில் ரிஷப் பண்ட் விபத்தில் சிக்கிய பிறகு அவருக்கு அறுவை சிகிச்சை செய்த மருத்துவர் தின்ஷா பர்திவாலா அறுவை சிகிச்சைக்கு முன் ரிஷப் பண்ட் தன்னிடம் கேட்ட முதல் கேள்வி என்ன? என்பது குறித்த சில தகவல்களை பகிர்ந்து உள்ளார்.

இது குறித்து அவர் பேசியது பின்வருமாறு: "அந்த கொடூர விபத்தில் சிக்கி உயிர் தப்பிய ரிஷப் பண்ட் மிகவும் அதிர்ஷ்டசாலி. அறுவை சிகிச்சைக்கு முன் மும்பையில் அவர் என்னை சந்தித்ததும் கேட்ட முதல் கேள்வியே 'மீண்டும் நான் விளையாட முடியுமா? என்பதுதான்" என்று கூறினார்.

## சச்சின் முதல் டெஸ்ட் சதம் அடிக்க நான்தான் காரணம் இங்கிலாந்து முன்னாள் வீரர் நகைச்சுவை

இந்திய கிரிக்கெட் அணியின் ஜாம்பவான் வீரரான சச்சின் தெண்டுல்கர் சர்வதேச கிரிக்கெட்டில் இதுவரை அதிக சதங்கள் (100) அடித்த வீரராக உள்ளார். இந்திய அணிக்காக 19892013ம் ஆண்டு வரை விளையாடிய அவர் டெஸ்ட் போட்டியில் மட்டும் 51 சதங்கள் அடித்துள்ளார். அவர் தனது முதல் டெஸ்ட் சதத்தை 1990ம் ஆண்டு இங்கிலாந்தில் நடைபெற்ற டெஸ்ட் தொடரில் பதிவு செய்தார்.

இந்நிலையில் முதல் முறையாக இங்கிலாந்தில் சச்சின் முதல் முறையாக சதம் அடித்ததற்கு காரணம் தான் தவற விட்ட கேட்ச்தான் காரணம் என இங்கிலாந்து அணியின் முன்னாள் வீரரான ஆலன் லம்ப் நகைச்சுவையாக கூறியுள்ளார். இது குறித்து அவர் பேசியது பின்வருமாறு: "சச்சினுக்கு 18 வயதாக இருந்தபோது நான் அவருக்கு எதிராக விளையாடினேன். அப்போது அவர் கொடுத்த கேட்சை நான்தான் ஸ்லிப் திசையில் இருந்து தவறவிட்டேன். அதனை பயன்படுத்தி அவர் அந்த போட்டியில் சதம் அடித்து அசத்தியிருந்தார். அதன் பின்னர் நான் சச்சினை எப்போது பார்த்தாலும், 'உங்களுடைய முதல் டெஸ்ட் சதம் இங்கிலாந்தில் பதிவானதற்கு நான்தான் காரணம் என அவரிடம் கூறிக் கொண்டே இருப்பேன்' என்று கூறி சிரித்தார்.

## டி20 கிரிக்கெட்: பாப் டு பிளெஸ்சிஸ் உலக சாதனை

அமெரிக்காவில் நடைபெற்று வரும் மேஜர் லீக் கிரிக்கெட் தொடரில் நடைபெற்ற ஆட்டத்தில் (இந்திய நேரப்படி இன்று) டெக்சாஸ் சூப்பர் கிங்ஸ் எம்.ஐ.நியூயார்க் அணிகள் மோதின.

இதில் டாஸ் வென்ற எம்.ஐ.நியூயார்க் அணியின் கேப்டன் நிக்கோலஸ் பூரன் பந்துவீச்சை தேர்வு செய்தார். அதன்படி முதலில் பேட்டிங் செய்த டெக்சாஸ் சூப்பர் கிங்ஸ் அணி 20 ஓவர்களில் 4 விக்கெட்டுகளை இழந்து 223 ரன்கள் குவித்தது. அதிகபட்சமாக கேப்டன் பாப் டு பிளெஸ்சிஸ் 103 ரன்களுடன் ஆட்டமிழக்காமல் களத்தில் இருந்தார்.

இதனையடுத்து 224 ரன்கள் அடித்தால் வெற்றி என்ற இலக்கை நோக்கி களமிறங்கிய எம்.ஐ.நியூயார்க் அணியால் 9 விக்கெட்டுகள் இழப்பிற்கு 184 ரன்கள் மட்டுமே அடிக்க முடிந்தது. இதனால் டெக்சாஸ் சூப்பர் கிங்ஸ் அணி 39 ரன்கள் வித்தியாசத்தில் அபார வெற்றி பெற்றது.

இந்த ஆட்டத்தில் அடித்த சதத்தையும் சேர்த்து பாப் டு பிளெஸ்சிஸ் கேப்டனாக டி20 கிரிக்கெட் இதுவரை 8சதங்கள்அடித்துள்ளார். இதன்மூலம் டி20கிரிக்கெட் வரலாற்றில் அதிக சதங்கள் கேப்டன் என்ற உலக சாதனையை படைத்துள்ளார். இந்த சாதனை பட்டியலில் விராட் கோலி 3வது இடத்தில் உள்ளார்.

அந்த பட்டியல்:

1. பாப் டு பிளெஸ்சிஸ் 8 சதங்கள் 2. மைக்கேல் க்ளிங்கர்/பாபர் அசாம் 7 சதங்கள் 3. விராட் கோலி 5 சதங்கள் 4. ஜேம்ஸ் வின்ஸ் 2 சதங்கள்

NAMADHU DHINA KANI
Canara Bank
Account: 120028528266
IFSC code: CNRB0001041

Printed by KANIRAJA V. published by KANIRAJA V. on behalf of NAMADHU DHINA KANI TAMIL DAILY and printed at SEAMAN GRAPHICS No. 7/253, KVN puram 2 2nd street, KilpaukGarden, Chennai 600010. and published at No.28, Thalikattipalayam, Kaithamalai Road, Uttukuli, Tiruppur - 638751. Editor: KANI RAJA V.